UNIVERSITY OF JAFFNA LIBRARY
29 NOV 2000
PERIODICALS DIVISION

REGISTERED AS A CATHOLIC WEEKLY. (P.197) Established 19 Feb. 1876

# பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

PATHUKAVALAN

மலர் :124
இதழ :11
19 கார்த்திகை 2000
விலை: ரூ 5.00

# யூபிலி ஆண்டில் சிறப்பு நிகழ்வு குருக்களுக்கான நற்கருணைப் பவனி

## சாட்டி யாத்திரையில் நடந்த ஆன்மீக நிகழ்வு

குருக்களுக்கான யூபிலி ஆண்டின் சிறப்பு நிகழ்வாக யாத்திரை ஒன்று ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி சாட்டி புனித சிந்தாத்திரை யாத்திரைத் தலத்திற்கு மேற்கொள்ளப்பட்டது. யாழ் மறை மாவட்ட குருக்கள் ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி யாத்திரை அனைத்துக் குருக்களுக்கும் ஆன்மீகப் புதுப்பித்தல் நிகழ்வாக அமைந்திருந்தது. யாழ் மறை மாவட்ட குருக்கள் அனைவரும் கலந்து கொண்ட இந்த யாத்திரையில் யாழ் மறை மாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வரும் அனுபவ முதிர்ச்சி பெற்றவருமான மைக்கல்சாமி அடிகளார் மறையுரை வழங்கி, குருக்களை நெறிப்படுத்தினார்.

பணி வாழ்வில் பங்குத்தளங்களிலும் தனிப்பட்ட வாழ்விலும் குருக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள், சவால்கள், துன்பங்கள், துயரங்கள, குழப்பங்கள் மத்தியில் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும். தமது வாழ்வையும் தமது கண்காணிப்பில் ஒப்படைக்கப்பட்டவர் வாழ்வையும் எவ்வாறு புனிதத்தின் வாழ்வில் வழி நடத்திச் செல்லலாம் என்பன பற்றிய பல அறிவுரைகளை தமது அறிவில் இருந்தும் அனுபவத்திலிருந்தும் வழங்கி, ஆன்மீக வாழ்வில் அவர்கள் உறுதி பெற்ற மனிதர்களாக வாழ வழிகாட்டினார்.

மாலை நடைபெற்ற நற்கருணை ஆராதனையின் போது நடத்தப்பட்ட குருக்கள் மட்டும் கலந்து கொண்ட நற்கருணைப் பவனி ஆன்மீக அனுபவ நிகழ்வாக அமைந்திருந்தது. நற்கருணைப் பவனிகள் பலவற்றை அர்த்த முள்ள விதமாகவும் பயனுள்ள விதமாகவும் இறை மக்களுக்கு நடத்தி அனுபவம் பெற்ற குருக்களுக்கென நடத்தப்பட்ட இச் சிறப்புப் பவனி உண்மையிலேயே உள்ளத்தைத் தொடுவதாகவும் ஆன்மீக உரமூட்டுவதா கவும் இருந்ததாக பலர் கருத்துத் தெரிவித்தனர்.

## ஞாயிறு திருப்பலியில் வாசகங்களை படித்து பயன்பெற விரும்புகிறீர்களா?

புதிய மொழிபெயர்ப்பிலான ஞாயிறு வாசகங்களை அச்சிட்டு வெளியிடும் பணியை திருவழிபாட்டு நிலையம் மேற் கொண்டுள்ளது. இவ் ஆண்டு திருவரு கைக் காலம் முதல் வெளியிடப்பட வுள்ள இவ் ஞாயிறு வார வாசக பிரதி களை, திருவழிபாட்டில் பொதுநிலை யினர் பயன்படுத்திக் கொள்ளவும் வருட இறுதியில் வாசகப் புத்தகமாக உரு வாக்கி வெளியிடவும் திட்டமிடப்பட்டுள் ளது என நிலைய இயக்குனர் ப.ஜோ. ஜெபரட்ணம் அடிகள் தெரிவித்தார்.

திருப்பலி வேளைகளில் இறைவார்த் தையை படித்துப் பயன்பெறவும் பின்னர் அதனை பத்திரப்படுத்தி வீடுகளில் புத்த கங்களாகக் கட்டிவைத்து பயன் பெற வும் இது ஒரு அரிய திட்டமாகும். நான்கு வாரங்களுக்கான வாசகப் பிரதிகளின் விலை 15 ரூபா மட்டுமே. பங்குத்தந் தையர்கள் இதனை இறைமக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி விற்பதன் மூலம் வீடுகளில் புதிய விவிலியம் இல் லாத குறையை இது ஓரளவு ஈடு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பங்கு மறையாசியர்களுக்கான யூபிலி யாத்திரை மார்கழி 10ஆம் திகதி பண்டத்தரிப்பில்

மார்கழி மாதம் 10ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை பண்டத்தரிப்பு புனித பற்றிமா மாதா யாத்திரைத் தலத் தில் அனைத்து மறையாசியர்களுக்கு மான யூபிலி யாத்திரையும் ஒன்று கூடலும் நடைபெறுமென மறைக்கல்வி நிலைய இயக்குனர் R.C.X. நேசராஜா அடிகள் காவலனுக்கு தெரிவித்துள் ளார்.

பங்குத் தந்தையர்கள் பங்குகளில் பணியாற்றும் எல்லா மறையாசிரியர்க ளையும் இந் நிகழ்வில் பங்குபற்ற அனுப்பிவைக்கும் படியும் பங்குபற்று வோரின் பெயர் விபர எண்ணிக்கையை 30-11-2000ற்கு முன்னர் மறைக்கல்வி நிலையத்துக்கு அனுப்பிவைக்கும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## காலம் தாழ்த்தாது தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு தீர்வுகாணுங்கள்

மேற்கண்டவாறு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நோர்வே தூதுக்குழுவினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்ற பின்னர் மேன் மைதங்கிய ஜனாதிபதி சந்திரிகா பண் டாரநாயக்க குமாரதுங்கவுக்கு எழுதிய கடிதத்தில் அழைப்பு விடுத்துள்ளார்.

காலம் தாழ்த்தாது தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குமுடிவுகாணும் படியும் நீதியோடுகூடிய ஓர் நிரந்தரத் தீர்வினைக் காண்பதற்கு கொடுக்கப்பட் டுள்ள ஒரு சந்தர்ப்பம் இது எனவும் தெரி வித்துள்ளார். *தொடர்ச்சி இறுதிப் பக்கம்.*

## நாட்டின் சமாதானம் வேண்டி விசேட நற்கருணை வழிபாடு

திருவருகைக்கால சுற்றுமடலை அண்மையில் குருக்களுக்கான வரு டாந்த ஞானவொடுக்க இறுதியில் வெளியிட்டு வைத்த ஆயர் திருவரு கைக் காலத்தின் 4 வெள்ளிக்கிழமை களிலும் பங்குகளின் பிரதான ஆலயங் களில் நாள் முழுவதும் நற்கருணை எழுந்தேற்றம் செய்து சமாதானத் துக்காக செபிக்கும்படி அழைப்பு விடுத் துள்ளார்.

*ஆயரின் திருவருகைக்கால சுற்று மடலை 3ஆம் பக்கத்தில் காணலாம்.*

## மணற்காடு புதிய பங்காக பிரிக்கப்பட்டது

மணற்காடு புதிய அந்தோனியார் ஆலயம் குடத்தனை புதிய இராயப்பர் ஆலயம் நடுக்குடத்தனை அன்னை வேளாங்கன்னி ஆலயம் ஆகிய 3 ஆலயங்களும் பருத்தித்துறைப் பங்கி லிருந்து பிரிக்கப்பட்டு மணற்காடு பங் காக 13.10.2000 அன்று உருவாக்கப்பட் டுள்ளது. இதன் முதற் பங்குத் தந்தையாக S.A. ஜோர்ஜ் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 7 ஆண்டுகளாக கிளி. - முல்லை. மறைக் கோட்டத்தில் பணிபுரிந்த பின் இப் பொறுப்பினை இவர் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## "பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பத்தை கைநழுவ விட வேண்டாம்"

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை இம்மாதம் 1ஆம் திகதி நோர்வே தூதுக்குழுவினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடை யில் திடீரென நடைபெற்ற பேச்சுவார்த் தையின் பின்னர் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களுக்கு விடுத்த அழைப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"தமிழ் மக்களின் துன்பங்களைக் கண்டு இப் போரை முடிவுக்குக் கொண்டு வர இணக்கம் தெரிவித்தது எல்லோர் உள்ளத்திலும் மகிழ்ச்சியையும் நிம் மதியையும் தந்துள்ளது. பேச்சுவார்த் தைக்கான இச் சந்தர்ப்பத்தை கைநழுவ விடாது இறுதிவரை நம்பிக்கையுடன் தடைகளைக் கண்டு பின்வாங்காது செயற்படுங்கள்" என்று தெரிவித்துள்ள

*யாழ். ஆயரின் கடிதத்தின் முழு மையை இறுதிப் பக்கத்தில் காண லாம்.*

## இனப்பிரச்சினை முடிவுக்கு பாப்பரசர் உதவி வேண்டப்படுகிறது

நவம்பர் மாதம் 3ஆம் திகதி ரோமாபுரியில் நடைபெற்ற கத்தோ லிக்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மகாநாட்டில் கலந்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சி கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா மேற்படி வேண்டுகோளை பாப்பரசரிடம் விடுத் துள்ளார்.

2000 யூபிலி ஆண்டு கொண்டாட் டங்களைக் குறிக்கும் விதமாக கூட் டப்பட்ட இம் மகாநாட்டில் இலங்கையின் நீண்டகாலப் போரினை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில் பாப்பரசர் 2ஆம் அருளப்பர் சின்னப்பர் ஓர் சிறப்பான பணியாற்ற வேண்டும் என்று கோரும் கோரிக்கையை டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா பாப்பரசரிடம் அண்மையில் கையளித்தார்.

## நோர்வேயின் மத்தியஸ்தத்தை வரவேற்கின்றோம்

### ஆயர் மல்கம் ரஞ்சித்

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு.வே.பிரபாகரனுக்கும் நோர்வேநாட்டு சமாதான தூதுவர் எறிக் சொல்கெய்மு வுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தை பற்றிக் குறிப்பிடும் போதே ஆயர் மல்கம் ரஞ்சித் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

யுத்தத்தினால் இனப் பிரச்சனைக்கு ஒரு போதும் தீர்வு காண முடியாது என்பது எமது நிலைப்பாடு. இந்த யுத்தமானது நாட்டில் வாழுகின்ற சகல மக்களதும் இயல்பு வாழ்க் கையை சிதைத்து, பேரழிவுக்கு கார ணமாகவுள்ளது. யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு அமைதியை உரு வாக்க பேச்சு வார்த்தைதான் சிறந்த வழி. ஆயர் மன்றமும் இக்கருத்தினை வலியுறுத்தி வந்துள்ளது என ஆயர் மல்கம் ரஞ்சித் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து...

### சமாதானம் செய்வோர்...

மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடனேயே எமது மண்ணின் நீண்டகாலப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்படலாம் என்ற கருத்தினை பல தடவைகளில் எமது ஆசிரியத் தலையங்கத்தில் வலியுறுத்தி வந்துள்ளோம்.

"நோர்வே நாட்டு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைகள்" என்ற செய்தி தமிழ் மக்கள் மனதில் புத்துணர்வையும் புதிய நம்பிக்கையையும் தோற்றுவித்துள்ளது.

தமிழ் மண்ணின் நீண்ட காலப்போர் அதன் தாக்கங்கள் அழிவுகள் இடம்பெயர்வுகள் இறப்புக்கள் மத்தியில் இனியும் தொடரப்பட முடியாதவை என்பது உலகறிந்த விடயமாகும். தமிழ் மக்களின் துன்பங்களையும் துயரங்களையும் வேதனைகளையும் விபரிக்கவோ எடுத்துரைக்கவோ வேண்டிய தேவை இனியும் இல்லை என்றே கருதுகின்றோம்.

எமது வாழ்நாள் காலத்தில் இப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்படுமா? என்ற ஏக்க உணர்வுகளாடு வாழ்கின்ற மக்களுக்கு நீண்டகாலமாக நடைபெற்ற இப்போர் இனியும் நீடிக்கப்படலாகாது. காலத்தை இழுத்தடிக்காது எமது சந்ததியினருக்கு எமது வாழ்நாள் காலத்திலேயே நீதியோடு கூடிய சமாதானத்தையும் நிம்மதியோடு வாழக்கூடிய ஒரு சூழ்நிலையையும் உருவாக்க உழைக்க வேண்டியது இந்த நாட்டின் தலைவர்கள் அனைவரதும் தலையாய கடமையாகும்.

நிபந்தனைகளுடன் பேசுவதா? நிபந்தனைகள் இன்றிப் பேசுவதா? யுத்த நிறுத்தம் மேற்கொண்டு பேசுவதா? இல்லையா? என்பதெல்லாம் இனியும் நடத்தப்பட வேண்டிய விவாதங்களல்ல.

கடந்தகால அனுபவத்தில் எமது மண்ணின் பிரச்சினை உக்கிரமடைவதற்கு இரு பகுதியினிடையேயும் இருந்த ஏமாற்று யுக்திகளும் அதனால் உருவாகிய நம்பிக்கையில்லா தன்மைகளுமே காரணமாகும்.

இரு தரப்பினருக்கிடையிலேயும் ஆழந்த நம்பிக்கையையும் புரிந்துகொள்ளும் தன்மையையும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் உருவாக்கி தடைகளைக் கண்டு பின்வாங்காத உறுதியான மனநிலை கொண்ட ஒரு பகுதியினரே இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் மூன்றாந் தரப்பினராக செயற்பட முடியும்.

போரினால் அரசியல் இலாபம் தேடவும் பொருளாதார வளங்களைச் சேர்க்கவும் தமிழ் மக்களின் அமைதியான வாழ்வை குழப்பவும் இருக்கின்ற சக்திகள் வழமைபோல செயற்படத் தொடங்கியுள்ளன.

தென்பகுதியில் உருவாகியுள்ள எதிர்ப்பு சக்திகள் என்றுமில்லாதவாறு குழப்பத்தை உருவாக்க கங்கணம் கட்டியுள்ள வேளையில் அதனை உரியவிதமாக சமாளிப்பதும் சரிப்படுத்துவதும் அரசினது கடமையாகும்.

*"சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர்"* எம் மண்ணில் நீதியோடுகூடிய நிரந்தர சமாதானம் மலர செபிப்பது எம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

# நற்செய்திப் பணியின் ஒரு வடிவம்
# விசுவாசத்தை ஆழப்படுத்துதலே!

**அருள்திரு அ.பெ.பெனற்**
**இயக்குனர்**
**நற்செய்தி அறிவிப்புப் பணியகம்**
**புனித அந்தோனியார் ஆலயம்**
**மானிப்பாய்.**

செல்லுங்கள் உலகெல்லாம்; சொல்லுங்கள் நற்செய்தி. (மாற். 16:15) இது இயேசு தம் சீடருக்கு விட்டுச்சென்ற அறைகூவல். சீடர்கள் இயேசுவைக் கண்டார்கள். அவர் போதனையைக் கேட்டார்கள். அவரை அனுபவித்தார்கள். தாங்கள் கண்டு, கேட்டு, அனுபவித்த இயேசுவின் நற்செய்தியை தங்களுக்குரிய பாணியிலே அன்றைய உலகிற்குப் பறை சாற்றினார்கள். இந் நற்செய்தியின் பணியானது தம்மேல் சுமத்தப்பட்ட கடமை என்றும் அந் நற்செய்திக்கு தூதுரைப்பதே தனது முதன்மையான பணி என்றும் புனித சின்னப்பர் கூறுகின்றார். இன்று அதே நற்செய்திப் பணி திருமுழுக்கினால் அர்ச்சிக்கப்பெற்ற நம் ஒவ்வொருவரிடமும் தரப்பட்டுள்ளது. அதுவே புனித சின்னப்பர் கூறியது போல் எமது கடமையும், அழைப்பும் ஆகும்.

இன்று 3ஆம் மிலேனியத்தில் கால் பதிக்கும் எமது யாழ். திருச்சபையினரின் நற்செய்தி அறிவிப்பின் வடிவம் என்ன?

ஆசிய நாட்டில் நற்செய்திப் பணி பற்றி, இறையியலாளர் பெலிக்ஸ் வில்விரட் கூறுகை யில், 'நற்செய்திப் பணி என்பது வெறுமனே விசுவாசத்தின் அகலம், நீளத்தை மட்டும் கூட்டுவதல்ல, அதன் ஆழத்தையும் அதிகப்படுத்துதலாக அப் பணி நடைபெற வேண்டும் என்று கூறுகின்றார்.

நற்செய்திப் பணி என்பது மதம் மாற்றுதல், திருச்சபையில் புதிதாக மந்தைகளைக் கூட்டிச் சேர்த்தல் என்பதல்ல. இச் செயல் மிகவும் சிக்கலானது. அடுத்த மதத்தவனின் மனங்களில் பல கசப்பான உணர்வுகளை உண்டு பண்ணும். மாறாக ஆசிய இறையியலாளர் கூறுவதைப் போன்று நாம் எமது யாழ். திருச்சபையின் விசுவாசத்தை ஆழப்படுத்த வேண்டும். இதுவே இன் றைய போர்ச் சூழ்நிலையில் மிகவும் தேவையானது எனக் கருதப்படுகின்றது. இடம்பெயர்வு அதன் பக்கவிளைவுகள், அத்தோடு பொதுத்தேர்தல் அதன் புதிய பெறுமானங்கள் இதன் பின்னணியில் மக்கள் தங்கள் விசுவாசத்தைத் தளரவிடக்கூடாது. தொடர்ந்தும் பற்றுறுதியோடு தமது வாழ்வின் அர்த்தத்தைக் கண்டுகொள்ளச் செய்வதும் இன்றைய யதார்த்த சூழல் விடுக்கும் நற்செய்திப் பணியாகும். அன்று இயேசு பாலஸ்தீனாவில் மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு செயற்பட்டார். இன்றைய போர்க்கால சூழ்நிலையில் அவர் மனித குலத்திற்கு எடுத்துச் சொன்னதை, அவருடைய வாழ்க்கையில் அவர் வாழ்ந்து காட்டிய விழுமியங்களை செயல்படுத்தக்கூடிய ஒரு பணிதான் நம் எல்லோரிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்ற நற்செய்திப் பணியாகும்.

இன்று நாம் இயேசுவின் நற்செய்தியின்படி வாழ்ந்து எமது வாழ்வு முழு வதையும் நற்செய்தியாக மாற்றவேண்டும். எம்மிடத்திலே இயேசுவின் மனநிலை இருக்கவேண்டும். அன்பு, தியாகம், மன்னிப்பு, ஏற்றுக்கொள்ளல், பொறுமை, செபவாழ்வு, தியான வாழ்வு போன்ற நல்ல விழுமியங்கள் எமது வாழ்வில் இழையோடுவதன் மூலம் எமது விசுவாசத்தைத் ஆழப்படுத்திக் இயேசுவின் நற்செய்திப் பணியாளராக வாழமுடியும். ஆனால், நாம் இப்படி வாழ்கின்றோமா "என்பதுதான் கேள்விக்குறி!

ஆரம்பகால கிறிஸ்தவர்கள் சிறு சிறு குழுமங்களாக, இயேசுவின் நற்செய்தியின்படி செயல்திறன் உள்ள வாழ்க்கை வாழ்ந்தனர். அதுவே அன்று உலகெங்கும் இயேசுவின் நற்செய்தி சுடர்விட காரணமாக அமைந்தது. இன்று நாம் ஏற்கனவே பெற்றுக்கொண்ட விசுவாசத்தை ஆழப்படுத்துவதற்கு மீண்டும் சிறு சிறு குழுமங்க ளாக வாழ்வதுதான் மிகத் தேவையானது.

இன்று அதன் புதிய வடிவம் 'அன்பியம்'. "அன்பியங்கள் அவைதான் புதிய கிறிஸ்தவ சமதாயத்தின் வித்துக்கள்" என்கின்றார் 2ஆம் அருள் சின்னப்பர்.

எனவே நாம் அன்பியங்களில் இணைவோம். கிறிஸ்துவே கூறியதைப் போன்று நாமும் புளிக்காரமாக, உப்பாக, ஒளியாக மாறி சிறு சிறு குழுமங்களில் எம்மை நாம் அர்ப்பணித்து எமது வாழ்வையும் எம் மக்களினது விசுவாசத்தையும் ஆழப்படுத்துவோம்.


- **இயேசுவைப் பற்றி அறிய விரும்புகிறீர்களா?**
- **இயேசுவின் நற்செய்தியை அறிய விரும்புகிறீர் களா?**
- **இயேசுவின் நற்செய்தியை வாழ விரும்பு கிறீர்களா?**

**உங்கள் இதயங்களைத் திறந்து விடுங்கள்.**

*குறிப்பு :* **திருமறை பற்றிய கலந்துரையாடல் செவ்வாய் மாலை 3.30 மணிக்கு தொடர்பு கொள்ளுங்கள்**

# நற்கருணையே கிறிஸ்தவ வாழ்வின்
# மையமும் ஊற்றும்


இளவாலை புனித யாகப்பர் ஆலய பொதுநிலையினர் கழகத்தினராலும் பங்குத் தந்தை அருள்திரு அன்ரனி பாலா அவர்களின் முயற்சியாலும் ஒழுங்குசெய்யப் பட்டு நடத்தப்பட்ட நற்கருணை பற்றிய கண்காட்சி நிகழ்வினை 05-10-2000 அன்று யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் வைபவ ரீதியாகதிறந்துவைத்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். "கிறிஸ்து பிறப்பின் 2000 ஆண்டு நிறைவை யூபிலி ஆண்டாகக் கொண்டாடும் நாம் புதிய வாழ்வின் அப்பமாக விளங்கும் இயேசுக் கிறீஸ்துவில்



**நற்கருணைக் கண்காட்சி நிகழ்வினை யாழ். ஆயர் அவர்கள் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டித் திறந்து வைப்பதனையும் ஆயருக்கு அருகில் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருள்திரு செல்வராஜா அவர்களும் இளவாலை பங்குத்தந்தை அருள்திரு அன்ரனிபாலா அவர்க ளும் காணப்படுகின்றனர்.**



**கண்காட்சி நிகழ்வின் ஓர் காட்சி அமைப் பான இலத்தீன் முறையில் அமைந்த திருப்பலி காட்சியமைப்பை ஆயரும் குருக்களும் சேர்ந்து பார்வையிடுகின்றனர்.**



**கண்காட்சி நிகழ்வில் ஆயர் உரையாற்றுகின்றார்.**

எமது விசுவாச வாழ்வை ஆழப்படுத்தவும் ஆன்மீக அறிவைவளர்க்கவும் உதவும் வகையில் அமைந்த நற்கருணை பற்றிய இக் கண்காட்சியை நாம் மிகுந்த சிரத்தையுடனும் உற்றுநோக்கி அவை தெளிவுபடுத்தும் மறையுண்மைகளை எமது வாழ்வாக்க முயலவேண்டும். ஏனெனில் கேட்டு அறிவதிலும் பார்க்க பார்த்து, தொட்டு, உணர்ந்து மேலும் எமது அறிவை விருத்தியாக்கும்".

இக் கண்காட்சி நிகழ்வுகளை நாம் பார்ப்பதுடன் மட்டும் நின்றுவிடாது அவை தெளிவுபடுத்தும் இறையுண்மைகளின் ஊடாக எமது நற்கருணை வாழ்விற்கு சான்றுபகர வேண்டும். அத்துடன் குறைந்தளவு மக்கள் தொகையினரைக் கொண்ட இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தினர் தமது பெரும் ஆர்வத்துடன் இந் நற்கருணை ஆண்டில் இக் கண்காட்சியை நடாத்தி மக்கள் மனத்தில் நற்கருணை மீதுள்ள ஆழமான பக்தியுணர்வை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சியினை நான் பெரிதும் பாராட்டுகின்றேன்" என மேலும் குறிப்பிட்டார்.

மேற்படி கண்காட்சி 05-10-2000 - 08-10-2000 வரை நான்கு நாட்கள் இடம்பெற்றது. ஏனைய நாட்களில் கண்காட்சி நிகழ்வினை ஆரம்பிப்பதற்காக முறையே அமலமரித் தியா கிகளின் சபையின் யாழ். மாகாண முதல்வர் அருள்தந்தை ஜீவேந்திரா போல் அவர்களும் யாழ். மறைமாவட்ட திருவழிபாட்டுக் குழு ஆணைத்தலைவர் அருள்தந்தை ஜெபரட்ணம் அவர்களும் இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருள்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களும் சிறப்பித்ததுடன் இறுதி நாள் மாலை நிகழ்வை யாழ். வேதாகம மறைக்கல்வி ஆணைக் குழுத் தலைவர் அருள்தந்தை நேசராஜா அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

மேலும் பட்டிமன்றம், 'கருணையுள்ளம்' நாடகம், செபத்தின் வல்லமை, பொம்மலாட்டம், கொரியாவில் இடம்பெற்ற நற்கருணைப் புதுமை பற்றிய வீடியோ படக் காட்சிகள் என்பனவும் கண்காட்சிக்கு மெருகூட்டின. இந் நிகழ்வுகள் யாவும் சிறப்புற அமைய கண்காட்சிக் குழுவினரை சகல விதத்திலும் நெறிப்படுத்திய யாழ். மறைமாவட்ட மறைப்போதகர் திரு. இ.ம. ஜெயசீலன் அவர்களின் பங்கும் பணியும் பாராட்டுக்குரியதாகும்.

*பொதுநிலையினர் கழகம்,*
*இளவாலை யாகப்பர் ஆலயம்,*
*இளவாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைஇரக்கத்தினாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும் யாழ். மறைமாவட்ட ஆயரான இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆகிய நாம் குருக்கள், துறவிகள், பொது நிலையினரான இறைமக்களுக்கு விடுக்கும் சுற்றுமடல்

### 1. முகவுரை

*கிறீஸ்துவில் அன்பார்ந்த இறைமக்களே!*

யூபிலி ஆண்டின் ஆரம்பத்தில் திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் "மீட்பருக்கு உங்கள் இதயங்களைத் திறந்து விடுங்கள்" என்று அழைப்பு விடுத்தார். இயேசு கிறீஸ்துவின் பிறப்பின் மாபெரும் யூபிலி ஆண்டுக்கு அர்ப்பண வாழ்வினாலும் உளமாற்றத்தினாலும் ஆயத்தம் செய்யும்படி வேண்டுகோள் விடுத்தார். இந்த அழைப்பை அனைத்துலக திருச்சபையானது கவனத்துடன் ஏற்று ஆழ்ந்த படிப்பு, செபம், சிந்தனை, கிறீஸ்தவ வாழ்வுக்கேற்ற திட்டங்கள் ஆகியவற்றின் மூலம், இம்மாபெரும் நிகழ்வுக்கான ஆயத்தங்களை மேற்கொண்டது. கடந்த 3 ஆண்டுகளும் ஆழ்ந்த செபம், தியானத்தின் காரணமாக இயேசுக் கிறீஸ்து, தூயஆவி, இறைதந்தை ஆகிய தூய திரித்துவத்தின் 3 ஆட்களையும் அவர்களுடன் நாம் கொண்டுள்ள நெருங்கிய உறவையும் பற்றி சிந்திக்கும் காலமாக இருந்தது. கொடிய யுத்தமும் அடிக்கடி நடந்த இடம்பெயர்வுகளும் அதனோடு கூடிய துன்ப துயர அனுபவங்களும் யாழ். மறைமாவட்டத்தில் எமது முயற்சிகளைத் தாமதப்படுத்தின. இந்த இடையூறுகளின் மத்தியிலும் கடந்த 3 ஆண்டுகளில் தூய திரித்துவத்தின் ஒவ்வொரு ஆளிலும் எமது கிறீஸ்தவ வாழ்வை ஒருமுகப்படுத்த முயற்சி செய்து ஓரளவு வெற்றியும் கண்டோம்.

### 2. மறைமாவட்டத்தில் யூபிலி ஆண்டுத் திட்டங்கள்

இம் முயற்சியில் 3 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட மறைமாவட்ட யூபிலி செயற்குழு, பொதுநிலையினர் அனைவரையும் ஆழ்ந்த உளமாற்றத்துக்கும் அர்ப்பணத்துக்கும் இட்டுச்செல்லும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் பயனுள்ள பல திட்டங்களை தீட்டி பெரிதும் துணைபுரிந்துள்ளது. குடாநாட்டிலுள்ள பங்குகளில் மகா ஞானவொடுக்கங்களை நடத்துவது எமது முக்கிய முயற்சிகளில் ஒன்றாக இருந்தது. தென்மராட்சியின் 7 பங்குகளிலும் வலிகாமத்தில் 4 பங்குகளிலும் இம் மகா ஞானவொடுக்கம் அமலமரித் தியாகிகள் சபையினரின் உதவியுடன் உரிய ஆயத்தங்களுடன் நடத்தப்பட்டது. மேற்கூறப்பட்ட எல்லாப் பங்குகளிலும் ஒவ்வொரு வீடும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் தரிசிக்கப்பட்டதுடன் பல செயற்பாடுகளும் பக்தி முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு ஆன்மீக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. யூபிலி ஆண்டின் அருளானது மக்களின் உள்ளத்தைத் தொட்டதை நாம் இங்கு வெளிப்படையாகக் காணக்கூடியதாக இருந்தது. துரதிர்ஷ்டவசமாக ஞானவொடுக்க போதகர்கள் பற்றாக்குறையினால் யாழ். நகரப் பங்குகளில் இம் மகா ஞானவொடுக்கத்தை வேறொரு நேரத்திற்கு பின்போட நேர்ந்துள்ளது.

### 3. போரும் மக்கள் இடம் பெயர்வும்

அன்புச் சகோதர சகோதரிகளே, யாழ். குடாநாட்டின் உள்ளே ஏறத்தாழ 1,70,000 மக்கள் தென்மராட்சியிலிருந்தும் வடமராட்சியின் சில பகுதிகளிலிருந்தும் யாழ். கடலேரியின் கரையோரக் கிராமங்களிலிருந்தும் இடம்பெயர்ந்துள்ளனர். இந்த இடம்பெர்வினால் கத்தோலிக்கர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எமது நிறுவனங்கள் அனைத்தும் இடம்பெயர்ந்துள்ளன. எமது மக்கள் இன்னும் முகாம்களிலும் தற்காலிக இருப்பிடங்களிலும் வசித்து வருகின்றனர். எவ்வளவு காலம் இப்படியே இருப்பது என்பதே மக்களின் மனதில் எழும் கேள்விக்குறியாகும். போருக்கு ஒரு முடிவு இருப்பதாக தெரியவில்லை. முகாம்களிலும் தற்காலிக விடுதிகளிலும் நீண்ட காலம் தொடர்ந்து வாழ்வது எமது இயல்பு வாழ்க்கை முறையையும் சுகாதாரத்தையும் கல்வியையும் ஒழுக்கத்தையும் கூடப் பாதிக்கின்றது. வேலையில்லா நிலையும் பொருளாதார வழி வகைகள் இல்லாமையும் எமது குடும்பங்களை வறுமையிலும் பிறரில் தங்கியிருக்கவும் செய்துள்ளனது. போரை முடிவுக்குக் கொண்டுவர ஒரு தீர்வு காணப்பட்டாலொழிய இந்தத் துன்பங்கள் தொடரவே செய்யும். சமாதானத்துக்காக செபிப்பதும் உழைப்பதும் எமது கடமையாகும், சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர்.

### 4. மூன்றாம் மிலேனியத் தின் முதலாவது கிறீஸ்மஸ் விழா

திருவருகைக் காலத்துடன் நாம் 3ஆம் மிலேனியத்தில் பிரவேசிப்பதோடு கிறீஸ்து இயேசுவில் எமது விசுவாசத்தையும் அர்ப்பணத்தையும் தொடர்ந்து ஆழப்படுத்துகிறோம். என்றுமில்லாத அளவுக்கு உலகம் இயேசு கிறீஸ்துவே தனது இரட்சகர் என்பதை உணர வேண்டியிருக்கிறது. 2000 யூபிலி ஆண்டு கிறீஸ்மஸ் விழா கொண்டாட்டங்களோடு ஆரம்பிக்கப்பட்டது போல் இவ் வருட கிறீஸ்மஸ் விழாவோடு முடிவடையும். இந்தக்காலம் நாம் தூய திரித்துவத்திடமிருந்து பெற்றுக்கொண்ட அனைத்து அருட்கொடைகளுக்கும் விசேடமாக இயேசு கிறீஸ்துவை எமது ஒரே மீட்பராகப் பெற்றுக்கொண்டமைக்கும் எமது ஆழ்ந்த மனமார்ந்த நன்றியை வெளிப்படுத்தும் காலமாகும். திருவருகைக் காலம் குடும்பங்களில் நாளாந்த செபத்தின் மூலமும் திருநூலைப் படிப்பதன் மூலமும் எம்மையும் எமது குடும்பங்களையும் கிறீஸ்து பிறப்பிற்கு ஆயத்தம் செய்யும் புனித காலமாகும். இடம்பெயர்ந்த எமது மக்கள் இந் நாட்களில் அனுபவித்துவரும் துன்ப துயரங்களை மனதிற் கொண்டு வெளி ஆடம்பரங்களையும் தேவையற்ற கொண் டாட்டங்களை நீக்கி நத்தாரை எளிமையாகக் கொண்டாடுவோம். வசதியற்ற நிலையில் இருப்பவர்களை பராமரித்து அவர்களோடு பகிர்ந்துகொள் வதன் மூலம் இக் கிறீஸ்மஸ் காலத்தை எமது வாழ்வின் உண்மையான ஆன்மீக நிகழ்வாக்குவோம். கிறீஸ்மஸ் தினத் திருப்பலியை ஒரு முக்கிய நிகழ்வாக்கி ஒவ்வொருவரும் பங்குபற்ற வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும்.

### 5. முடிவுரை

1. திருவருகைக் காலத்தை எம் அயலவருடன் நாம் ஒப்புரவாகி உள்ளார்ந்த ரீதியில் குணப்படுத்தப்படவும் நேரகாலத்தோடு ஒப்புரவு அருட்சாதனத்தில் பங்குபெற ஆயத்தம் செய்யவும் பயன்படுத்துவோம். இதற்குதவியாக ஆலயங்களில் ஒப்புரவு வழிபாடுகள் நடத்தப்பட்டு பாவசங்கீர்த்தனம் செய்ய சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்.

2. போர், இடம்பெயர்வு காரணமாக நாம் யூபிலி ஆண்டில் முழுமையாகப் பங்குபற்ற முடியவில்லை. எனவே மகா ஞானவொடுக்கம் நடைபெறாத பங்குகளில் அவற்றைத் தொடர்ந்து நடத்தவும், பல்வேறு செயற்பாடுகளினால் எமது நற்கருணை வாழ்வை ஆழப்படுத்தவும் முயல்வோம். மறைமாவட்ட நற்கருணை மகாநாடு இதற்கு ஒரு சிறப்பம்சமாகும்.

3. பங்கேற்கும் திருச்சபையை நோக்கி செல்லும் எம் பயணத்தில் சிறு கிறீஸ்தவ குழுமங்கள் எமது எல்லாப் பங்குகளிலும் நன்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். ஏற்கனவே சில ஆரம்ப முயற்சிகள் செய்யப்பட்டாலும் இதில் ஆர்வமும் பங்களிப்பும் இன்னும் போதாமல் இருக்கிறது.

4. முகாம்களிலும் வேறிடங்களில் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்கு தொடர்ந்து எமது ஆதரவும் உதவியும் தேவை. குருக்கள், சகோதரர்கள், கன்னியர்கள், மறையாசிரியர்கள் இடம்பெயர்ந்து வாழும் இவர்கள் மட்டில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

5. ஆண்டின் இறுதியில் நடத்தப்படும் கரோல், ஒளிவிழாக் கொண்டாட்டங்கள் உண்மையிலேயே ஆண்டவர் இயேசுவின் பிறப்பு மகிழ்ச்சியின் பகிர்வுக் கொண்டாட்டங்களாகும். இவற்றை அன்றாட அடிப்படைத் தேவைகளற்றவர்களாக முகாம்களிலும் தற்காலிக விடுதிகளிலும் வேறிடங்களிலும் தங்கியிருப்பவர்களுக்கு அர்த்தம் தரத் தக்கவிதமாக அமைப்பது சிறந்தது. இந் நிகழ்வுகளை நிதி சேகரிக்கும் குறுகிய நோக்குடன் அணுகாமல் கிறீஸ்து பிறப்பின் செய்தியியை அறிவிக்கும் சந்தர்ப்பங்களாக பயன்படுத்த வேண்டும்.

6. நீண்டகால இடைவெளியின் பின் போர் ஓய்ந்து அமைதிக்கான சமிக்ஞைகள் வெளிப்பட்டுள்ள வேளையில் பேச்சுவார்த்தை முயற்சிகள் முழு வெற்றியைக் காண செபிப்பது எம் ஒவ்வொருவரதும் பொறுப்பான கடமையாகும். கிறீஸ்மஸ் காலம் சமாதானத்தின் அரசரிடம் எம் மண்ணுக்கு அமைதியும் சமாதானமும் வேண்டி செபிக்க உகந்த காலமாகும். தனிப்பட்ட பொதுவான சிறப்பு வழிபாடுகளை ஒழுங்குசெய்து மண்ணின் அமைதிக்காக செபிக்க பங்குகளில் ஆவண செய்யப்பட வேண்டும்.

ஆண்டவரில் உங்கள் மேல் பற்றுள்ள
✠ இ.தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ். ஆயர்

## அமதிபுரம் பங்கில் மாபெரும் மறைக்கல்வி விழா

### அமதிபுரம் பங்கு மறையாசிரியர்கள் தந்த தகவல்

தேசிய மறையாசிரியர் தினமன்று அமதிபுர பங்குத்தந்தை ஸ்ரனிஸ்லாஸ் அடிகளின் தலைமையில் 8ஆம் கட்டை "புனித பற்றிமா" பாடசாலையில் மறைக்கல்வி விழா சிறப்பான முறையில் கொண்டாடப்ட்டது.

செப்டெம்பர் மாதம் 24ஆம் திகதி காலை 10.00 மணியளவில் எமது பங்குத்தந்தை, உதவிப் பங்குத்தந்தை பா.ஜெயபாலன் அ.ம.தி. அருள்சகோதரிகள் எலிசெபத், பிறீடா, யக்குளின், அமதிபுரம், ஆரோக்கியபுரம், ஸ்கந்தபுரம், வன்னேரிக் குளம் ஆகிய நான்கு பங்கினையும் சார்ந்த மறையாசிரியர்கள் மறைக்கல்விப் பிள்ளைகள் அனைவரும் இணைந்து திருப்பலியுடன் ஆரம்பமானது. இந்நிகழ்வில் 375 மறைக்கல்விப் பிள்ளைகள் இணைந்து கொண்டனர். திருப்பலியின் மறையுரையின் போது அருள்தந்தை ஜெயபாலன் மறைக்கல்வியின் மகத்துவத்தையும் அதன் மேன்மையையும் எடுத்துரைத்து எமது உள்ளங்களில் அவை எதிரொலிக்கப்பட வேண்டுமென எடுத்துக்கூறினார். திருப்பலியினைத் தொடர்ந்து அருள்தந்தை றெஜினோல்ட் அ.ம.தி அவர்களின் தலைமையில் குழு விளையாட்டுக்கள் இடம்பெற்றன.

இதன்பின்னர் மறைக்கல்வியின் நோக்கம், அதன் வரலாறு பற்றிய உரையும், பாடல்களும் இடம்பெற்றன. உரையினைத் தொடர்ந்து மறையாசிரியர்களினால் குழு நிகழ்ச்சிகள் விவிலிய வினாடி வினாப் போட்டிகள் இடம்பெற்றன.

பின்னர் மறையாசிரியர்களுக்கான புதிய நிர்வாகம் தெரியப்பட்டு மறையாசிரியர்களுக்கு நல்வழிகாட்டியாக அருள் சகோதரி ஜோசப்பின் மேரி நியமிக்கப்பட்டார். பீடப்பரிபாலகர் அனைவருக்கும் அருள்சகோதரி பிறீடா பொறுப்பாக நியமிக்கப்பட்டார். பின்னர் பங்குத் தந்தையின் இறுதி நன்றி வேண்டி உரையுடன் மாலை நிகழ்ச்சிகள் யாவும் இனிதே நிறைவுற்றது.

## இரணைப்பாலையில் மறைக்கல்வி விழா

இரணைப்பாலை புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் கடந்த 24.09.2000 அன்று அருள்தந்தை பிரான்சீஸ் ஜோசவ் அடிகளார் தலைமையில் மறைக்கல்வி விழா நடைபெற்றது. முதல் நிகழ்வாக திருப்பலியை நிறைவேற்ற அருள்தந்தை பேனாட் அடிகளாரை மாலை அணிவித்து வரவேற்றனர். பாப்பரசரின் கொடியயினை அருள்தந்தை அல் போன்ஸ் அடிகள் ஏற்றி வைக்க பாப்பரசர் கீதம் இசைக்கப்பட்டது. மறைக்கல்வி கொடியினை மறையாசிரியத் தலைவி ஏற்றி வைத்தார். அருள்தந்தை பேனாட் அடிகளார் மறையுரையாற்றுகின்ற போது மறைக் கல்வியின் மகத்துவத்தை எடுத்துக் கூறி மறைக்கல்வி பாடத்தை பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வீட்டில் வைத்து ஊட்ட வேண்டுமென்றும் தெரிவித்தார். மேலும் தமது சிரமத்தை பாராது ஒவ்வொரு கிழமையில் மறையறிவை புகட்டும் மறையாசிரியர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்தார். பங்குத் தந்தை தனது நன்றியுரையில் திருப்பலி ஒப்புக் கொடுத்த அருள்தந்தைக்கும் மறையாசிரியர் மாணவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

தி. யெனிஸ்ரன் பெனடிற்
இரணைப்பாலை

## நற்கருணைப் பவனி விழா

நெடுந்தீவுப் பங்கில்5-11-2000 ஞாயிறு அன்று மாபெரும் நற்கருணைப் பவனி விழாவாகக் கொண்டாடப்பட்டது. இவ் விழா நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருள் திரு M.L. மொன்போட் தலைமையில் உதவிப் பங்குத்தந்தை அருள்திரு ஞானேந்திரன், பங்கு அருள்சகோதரிகள், பங்கு நிர்வாக அங்கத்தவர்கள் பங்கு மக்கள் அனைவரின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது. இவ் விழாவைச் சிறப்பிக்க ஊர்காவற்றுறை உதவிப் பங்குத்தந்தை அருள்திரு யூட் நிக்சன், நாரந்தனை உதவிப் பங்குத்தந்தை அருள்திரு றொபின்சன் ஆகியோர் வந்திருந்தனர்.

காலைத் திருப்பலியின் பின் புனித யுவானியார் ஆலயத்தில் நற்கருணை எழுந்தேற்றம் பண்ணிவைக்கப்பட்டு வழிபாடுகள் நடத்தப்பட்டு மாலை 4.00 மணிக்கு பொது ஆராதனையுடன் 4.30 மணிக்கு பவனி ஆரம்பமானது.

பவனி யுவானியார் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி முதலாவது ஆராதனை பிரதேச சபைக்கு அருகாமையில் நடைபெற்றது. அவ் ஆராதனையின் போது "இஸ்ராயேலருக்கு பாலைவனத்தில் உணவாக மன்னா 'என்னும் உணவு வழங்கப்பட்டது. ஆனால் புதிய வாழ்வின் அப்பமாக தன் உடலையும் இரத்தத்தையும் இறைமகன் தம் அருள் வாழ்விற்கு உணவாக வழங்கினார்" என்று அருள்தந்தை றொபின்சன் தம் மறையுரையில் எடுத்துரைத்தார். 2வது ஆராதனை புனித பற்றிமா அன்னை ஆலயம் முன்பாக நடைபெற்றது. "இரு குருடர்களுக்கு பார்வையை வழங்கிய இறைமகன் எம் ஒவ்வொருவரின் உடல் நோய்களையும் உளநோய்களையும் நாம் விரும்பும்போது தொட்டுக் குணமாக்குவார்" என்று அருள்திரு யூட் நிக்ஷன் தம் மறையுரையில் எடுத்துரைத்தார். 3ஆவது ஆராதனை புனித மரியன்னை ஆலய முன்றலில் இடம் பெற்றது. "உறவுகள் பல வகை ஒவ்வொன்றும் ஒரு வகை. இவ்வுறவுகளில் இரத்த உறவேஉண்மையான, மேலான உறவு என்றும் தாய்க்கும் பிள்ளைக்கும் உள்ள இரத்த உறவைவிட இறைமகன் எம்மில் கொண்ட இரத்த உறவு மேலானதும் மிக வலிமை வாய்ந்ததும்" என பங்குத்தந்தை அருள்திரு M.L. மொன் போட் தம் மறையுரையில் எடுத்துரைத்தார்.

இறுதியாகப் பவனி புனித சவேரியார் ஆலயத்தைச் சென்றடைந்தது. அங்கு உதவிப் பங்குத்தந்தை அருள் திரு ஞானேந்திரனின் ஆர்ப்பரிப்புப் பாடலுடனும் நற்கருணை ஆசீருடனும் விழா இனிதே சிறப்புற நிறைவு பெற்றது. பவனியின் போது ஒவ்வொரு நிலைகளிலும் நற்கருணைசீா வழங்கப்பட்டது சிறப்பு அம்சமாகும்.

*தகவல் : திருமதி மெக்டலின் அமலோற்பவதாஸ*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாயிரம் ஆண்டின் புனிதர்

# பவுஸ்தீனா கோவால்ஸ்கா

பவுஸ்தினா கொவால்ஸ்கா புனிதர் ஆக்கப்படுவதைப் பற்றி ஒரு குருவானவர் இருபது வருடங்களாகச் சிந்தித்த வண்ணமே இருந்தார். சகோதரி பவுஸ்தினாவின் புனித பட்டத்துக்கு பொறுப்பானவராகவிருந்த அருள்தந்தை செரபிம் மைக்கலென்கோ அடிகள் இறைஇரக்கத்தின் மாபெரும் சீடராகிய பவுஸ்தினாவின் பெயர் எப்பொழுது புனிதர்களின் பட்டியலில் சேர்க்கப்படும் என்பதை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்,

திருத்தந்தை இரண்டாவது அருள் சின்னப்பர் பவுஸ்தினாவுக்குப் புனிதர் பட்டம் வழங்கப்படுவதற்குரிய புதுமையை அனுமதித்த பின்பு அருள்தந்தை செரபிம் பவுஸ்தினாவின் வாழ்க்கை, அவருடைய முயற்சிகள், அவவுக்கு புனிதர் பட்டம் வழங்கப்படுவதற்கான புதுமைகள் பற்றிய சில கேள்விகளுக்குப் பதிலளித்திருந்தார்.

**கேள்வி :** சகோதரி பவுஸ்தினாவுக்குப் புனிதர் பட்டம் வழங்கப்படுவது உறுதியாகி விட்டதால் அவருடைய பிற்காலம் எப்படி இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

**பதில் :** மரிய பவுஸ்தினா அதிசிறந்த தற்காலத்துப் புனிதர்களுள் ஒருவராக நிச்சயமாக மதிக்கப்படுவார் அவரின் எழுத்துக்கள் மூலம் பரப்பப்பட்ட இறை இரக்கப் பக்திச்செய்தி வேறெந்தப் பக்தி வழிபாட்டிலும் பார்க்கத் தீவிரமாகப் பரவியுள்ளது.அவர் மூலம் எமதாண்டவரால் திருச்சபைக்கு விடுக்கப்பட்ட இறை இரக்கத்திருநாள் அது திருச்சபையினால் முறையாக அங்கீகரிக்கப்படுவதற்கு முன்பே உலகம் முழுவதும் பரவி இருந்தது ஒரு தனிச்சிறப்பான நிகழ்வாகும்.

சகோதரி பவுஸ்தினா இறந்து அறுபது ஆண்டுகளுக்குள் இறை இரக்கச் செய்தியும் திருநாளும் உலகெங்கிலும் தீவிரமாகப் பரவி இருப்பதை நாங்கள் கண்டுள்ளோம். இந்த அறுபது ஆண்டுகளில் இருபது ஆண்டுகள் இச்செய்தியும் பக்தியும் தடைசெய்யப்பட்டிருந்தது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. ஆகவே இத்தீவிரமான பரப்புதல் உலகளாவிய ரீதியில் அடிமட்டத்தில் உள்ள பொதுமக்களின் இயக்கத்தினாலேயே ஏற்பட்டது என்றும் எடுத்துக்கொள்ளலாம்.

**கேள்வி :** அவருடைய எழுத்துக்களும் இறை இரக்கப்பக்தி வழிபாடும் திருச்சபையினால் ஏன் தடைசெய்யப்பட்டது?

**பதில் :** அவருடைய மரணத்தின் பின்பு அவருடைய சபையிலிருந்த அருட் சகோதரிகள் அவருடைய கையேட்டு எழுத்துக்களைப் செய்தும் சில பகுதிகளை வெளியிட்டும் வந்தனர். அவர்கள் அவற்றில் சில திருத்தங்களைச் செய்தோ புதிதாகச் சேர்த்தோ அல்லது உள்ளதைச் சேர்க்காமல்விட்டோ பல பிழைகளை ஏற்படுத்தி இருந்தனர். இவற்றின் மொழிபெயர்ப்புகள் வேறு மொழிகளில் வந்த பொழுது அவை திருச்சபை அதிகாரிகளை தடைசெய்ய வைத்தது. அப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருந்த கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ் அவற்றை மூலப் பிரதியுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் முடியாதிருந்தது.

**கேள்வி :** இரண்டாவது அருள் சின்னப்பர் திருத்தந்தையாவதற்கு முன்னர் இத்தடை நீக்கப்படுவதற்கு பெரிய அளவில் காரணமாக இருந்தார். அது எப்படி நடைபெற்றது.

**பதில் :** உண்மையில் கிறக்கோ மறைமாவட்டத்தில் உள்ள மக்களே அப் பொழுது கருதினாலாக இருந்த திருத்தந்தையை பவுஸ்தினாவின் புனிதத் தன்மையைப் பற்றி ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி 1965ல் தூண்டு கோலாக இருந்தார்கள். அந்த வரிசையில் பவுஸ்தினாவின் எழுத்துக்களை ஆராய்வதும் அவர் இறப்பதற்கு முன்பு அவரைத் தெரிந்தவர்களை நேர்காணலும் ஒரு பகுதியாக இருந்தது.

கருதினால் வொஜ்ரிலா (திருத்தந்தையாகப் பின்னர் உயர்த்தப்பட்ட இரண்டாவது அருள் சின்னப்பர்) மத சாஸ்திரத்தில் விற்பன்னரான ஒருவரை பவுஸ்தினாவின் கையேட்டையும் கடிதங்களையும் நன்கு படிக்கும்படி கேட்டுக்கொண்டார். பவுஸ்தினா அதிகம் படிக்காததால் அவருடைய எழுத்துக்களில் பிழைகள் மலிந்து கிடந்தன. அதனால் அவற்றைப் படித்தறிவது மிகவும் கடினமாக இருந்தது.

அவற்றைப் படித்து முடித்த நிபுணர் அவ் எழுத்துக்களில் உள்ளபடி வாழும் எவரும் புனிதத் தன்மையை அடைவார்கள் என்றும் அவற்றில் சொல்லப்பட்டிருக்கும் வெளிப்பாடுகள் ஒரு தெய்வீகச்சக்தியினால் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்றும் பவுஸ்தினாவின் கையேடு மறைபொருளானது என்றும் தனது கருத்தைத் தெரிவித்தார்.

இவருடைய அறிக்கை திருச்சபையை தனது தடையை நீக்குவது என்று முடிவு செய்வதற்கு வழிவகுத்தது. 1978ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 18ந் திகதி அத்தடை நீக்கப்பட்டது. சரியாக ஆறுமாதங்களுக்குப் பின்பு கருதினால் வொஜ்ரிலா இரண்டாவது அருள் சின்னப்பராகத் தெரிவு செய்யப்பட்டார்.

**கேள்வி :** சகோதரி பவுஸ்தினா உயர்த்தப்படுவதற்கு ஏதுவான இரண்டு புதுமைகளோடும் நீங்கள் சம்பந்தப்பட்டிருக்கிறீகள்?

**பதில் :** ஆம். அத்தோடு நான் முதலாவது புதுமை நடைபெற்ற பொழுது நான் இருந்திருக்கிறேன். அது 1980ம் ஆண்டு தொடங்கியது பொஸ்ரனிலுள்ள பொப் டிகன் என்னுடன் தொடர்பு கொண்டார். நான் சகோதரி பவுஸ்தினாவின் மேன்மைக்காக உழைக்கும் ஸ்தாபனத்தின் பொறுப்பாளர் என்று அவருக்குத் தெரியும். சகோதரி பவுஸ்தினாவின் தலையீட்டினால் தனது மனைவி மொறினின் மாற்ற முடியாத வியாதி தீரும் என்று அவர் நம்பிக்கை வைத்திருந்தார். தங்களுடனும் தங்களின் மகன் பொபியுடனும் என்னைப் போலந்துக்குப் போகும்படி கேட்டார்கள். எனது மேலதிகாரிடமிருந்து அனுமதி பெற்று 1981ம் ஆண்டு நான் போலந்துக்குச் சென்றேன்.

ஒன்பது நாள் நடைபெறும் நவநாளின் கடைசி நாளன்று பவுஸ்தினாவின் கல்லறையில் நின்று செபித்த பின்பு மொறினுடைய வியாதி புதுமையாக மறைந்து விட்டது.

**கேள்வி :** அதுதான் பவுஸ்தினா முத்திப்பேறு பெற்றவராக உயர்த் தப்படுவதற்குக் கிடைத்த சம்பவம் பவுஸ்தினாவைப் புனிதராக்குவதற்குக் கிடைத்த புதுமையில் நீங்கள் எப்படிச் சம்பந்தப்பட்டிருந்தீர்கள்.

**பதில் :** 1995ல் அருள்தந்தை றொன்பைரல் புதுமையாகக் குணமடைந்த பின்பு எனக்கு எழுதினார். அவரை எனக்கு முன்பின் தெரியாது, ஆனால் அவர் என்னைப் பற்றி அறிந்திருந்தார். மேரியன் சபையிலுள்ள அருட்தந்தை ஒருவர் ண்பைரல் குணமடைந்த அன்று நடைபெற்ற திருப்பலிப்பூசையில் பங்குபற்றி இருந்தார். கடிதம் கிடைத்ததும் நான் அப்புதுமை பற்றிய விபரங்களை அறிந்து கொள்வதற்காகப் பால்ரிமோர் மறை மாவட்டத்துடன் தொடர்பு கொண்டு செயல்பட்டேன்.

**கேள்வி :** பவுஸ்தினாவின் வாழ்வு விசுவாசிகளுக்கு இன்று எப்படி ஊக்கம் அளிக்கின்றது?

**பதில் :** அவர் அசாதாரண வகையில் ஒரு சாதாரண வாழ்வை வாழ்ந்து வந்தார். ஒரு புனிதராக மாற வேண்டுமென்பது அவருடைய பெருவிருப்பாக இருந்தது. தனது ஒவ்வொரு சிறிய வேலையையும் எமதாண்டவரின் தொண்டுடன் இணைத்துக் கொண்டார். புனித திரேசாவின் "சிறிய வழி" என்பதைப் போன்றது இது.

எமது ஆண்டவர் சிறியவளாக இருக்கும் பொழுது அடிக்கடி காட்சி அளித்தார். தனக்கு எதற்காகக் காட்சியளிக்கிறார் என்று அவள் அவரிடம் கேட்டபொழுது, அவள் சிறுமியாக இருக்கும் போதே ஆன்மீகப் பாடங்களை அறிந்து கொண்டு ஆண்டவரைத் தாழ்மையுடனும் நம்பிக்கையுடனும் ஒரு குழந்தையைப் போல் அணுகவேண்டும் என்பதற்காக என்று கூறியிருந்தார்.

**கேள்வி :** சிறுமியாக இருந்த பொழுதே தான் ஒரு தூயவளாக் இருக்க வேண்டும் என்று பவுஸ்தினா ஆசைப்பட்டார். அவருக்கு அந்த ஆசையை எது வழங்கியது?

**பதில் :** அவருடைய தந்தையார் அவர் சிறுமியாக இருந்த பொழுது முனிவர்கள், தபசிகளைப் பற்றி அவருக்கு வாசித்துச் சொல்லிக் கொடுத்து அவர்கள் கடவுளுடன் ஒன்றித்திருப்பதற்கு என்னபாடுபட்டார்கள் என்பதைச் சொல்லி இருந்தார் அவையாக இருக்கலாம். அவற்றை அவர் தன்னோடொத்த பிள்ளைகளுக்குச் சொல்லி முனிவர்களைப்போல வாழ்வது புதுமையானது என்று கூறிக்கொள்வார்.

எத்தனையோ அருட்சகோதரிகள் பவுஸ்தினாவின் தூய்மையை அறிந் திருந்தனர். அதனால்தான் அவர்கள் அவரில் நம்பிக்கை வைத்து ஆலொசனை கேட்கச் சென்றனர். இப்பொழுது அவர் ஒரு புனிதர் ஆக்கப்பட்டுள்ளதால் நாம் எல்லோரும் அவரிடம் செல்லலாம்.

2000ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30ந் திகதி முத்திப்பேறு பெற்ற பவுஸ்தினா திருத்தந்தை இரண்டாவது அருள் சின்னப்பர் அவர்களால் உரோமையில் உள்ள சம்பேதுருவானவர் சதுக்கத்தில் நடைபெற்ற இறை இரக்கப் பெருவிழாவின்போது புனிதராக உயர்த்தப்பட்டார்.

நன்றி- "மேரியன் ஹெல்பரஸ்" சஞ்சிகை
தமிழாக்கம் —அருள் மா. இராஜேந்திரன்
செயலர் இறைஇரக்கப் பக்திக்குழு

## இறைஇரக்கத்தினூடாக விண்ணகம்



புனித மரிய பவுஸ்ரீனா கொவால்ஸ்கா என்னும் சகோதரி, 1905ம் ஆண்டு ஆவணி 25ந் திகதி பிறந்தார். இவர் தமது 20வது வயதில், இரக்கத்தின் அன்னையயின் சபை யிலே சேர்ந்து 1928ல் முதல் துறவற அர்ப் பணம் செய்து, போலந்து நாட்டில் உள்ள பல மடங்களில் தாழ்ந்த பணிகளைச்செய்து கொண்டு வந்தார்.

"தேவ ஆவியிலே நிறைவு பெறுங்கள். தேவஆவி ஏவிய சங்கீதங்கள், புகழ் பாக்கள், பாடல்கள் இவற்றைக் கொண்டு உரையாடி, ஆண்டவருக்கு உளமார இசை பாடிப் புகழுங்கள். இங்ஙனம் கடவுளும் தந்தை யுமானவருக்கு, நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் பெயரால், அனைத்திற்காகவும் எந்நேரமும் நன்றி கூறுங்கள்." எபே. 5: 19-20

மேற்கூறிய திருத்தூதர் பாவிலுவின் போதனைப்படி பக்தியுள்ள பவுஸ்ரீனா அன்னை தன் மடவாசப் பணிகளிலெல்லாம் இறைசித்தத்தோடு இணைந்து, புத்தி, மனம், வாக்கு, கிரிகையில் எப்பொழுதும் தூய்மையாக வாழ்ந்து வந்தார். இதன் பலனாகத் தந்தை இறைவன் தம் திருமகனை மேற்படி சகோதரிக்கு 1930ம் ஆண்டில் இருந்து 1938ம் ஆண்டுவரை திருக்காட்சி கொடுக்கப்பணித்தார். இக்காட்சிகளுள் ஒன்றுதான், இறை இரக்கப்பக்தியினூடாக விண்ணகம் செல்ல மக்களை ஆயத்தம் செய்வது, எவ்வளவு கேடுகெட்ட பாவிக்கும் இறைவனின் இரக்கம் கிடைக்கும். இவ் இரக்கப்பெருக்கத்தைப்பெற மக்களைத் தயார் செய்ய, அவர்களுக்கு ஆசையை ஏற்படுத்த, அவர்களும் இப்பக்தியில் ஈடுபட, தங்களுக்காகவும், பிறருக்காகவும் முழு உலகத்திற்காகவும் மன்றாடும்படி பணித்துள்ளார். ஆகவே நாமும் இயேசுவின் இறைஇரக்கப்பக்தியில் கலந்து கொள்வோம், பிறர் கலந்து கொள்ள ஊக்குவிப்போம், பலரது மீட்புக்கு நாம் காரணமாய் இருப்போம். உயிர்த்த ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்வரும் ஞாயிற்றுக கிழமையை இறைஇரக்க ஆண்டவரின் பெருவிழாவாகக் கொண்டாடி, இயேசுவின் பெயரால் நம்மிடம் வருவோர், நம்மை எதிர்கொள்வோர், நமது உதவியை நாடுவோர்க்கு, நம்மாலான உதவிகள் செய்வதன் மூலம் "வாருங்கள் என் தந்தையின் ஆசிபெற்றவர்களே, உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்துள்ள அரசு உங்களுக்கு உரிமையாகுக." மத்: 25:34 என்னும் திருவசனத்தில் அருளப்பட்ட தேவ பலன்களை நம்முடையதாக்கிக் கொள்ளு வோம். ஆம் பிரியமானவர்களே இப்பலனைப்பெறும் பொருட்டே நாம் பிறந்து பயணம் செய்து கொண்டிருக்கிறோம், கர்த்தராகிய நல்ல தேவன் இதை வாசிக்கும் உங்கள் எல்லாரையும் எல்லா ஆசீர்களாலும் நிறைத்துப் பாதுகாத்து நல்வழி செவ்வழி நடத்துவாராக.

அருட்சகோ.ஞா. மரியநாதன் (பு..பி.ம.ச)
அசிசி இல்லம்
மட/ குருக்கள் மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக இளைஞர் தினத்துக்கான திருத்தந்தையின் செய்தி (ஆகஸ்ட் 15, 2000)

## "வாக்கு மனிதனார் நம்மிடையே குடிகொண்டார்" (யோவான் 1:14)

*அன்பிற்குரிய இளைஞர்களே,*

பதினைந்து ஆண்டுகளுக்கு முன், மீட்பின் புனித ஆண்டின் முடிவிலே, மரத்தாலான ஒரு பெரிய சிலுவையை நான் உங்களிடம் கையளித்து இயேசுநாதர் மனுக்குலத்தின் மீது கொண்டுள்ள அன்பின் அடையாளமாக உலகைச் சுற்றி அதைக் கொண்டு செல்லும்படியும், மரித்து உயிர்த்த கிறிஸ்துவிலேயே மீட்பும் ஈடேற்றமும் உண்டு என்பதை அனைவர்க்கும் அறிவிக்கும்படியும் உங்களிடம் கேட்டிருந்தேன். அன்று முதல், சிலுவை இளைஞரோடு செல்கிறது என்பதையும், இளைஞர்கள் சிலுவையோடு செல்கிறார்கள் என்பதையும் காட்டக்கூடிய விதமாக, தாராள உள்ளத்துடன் வன்மைமிக்க கரங்களால் எடுத்துச் செல்லப்பட்ட இச் சிலுவையானது கண்டங்களைக் கடந்து இடையறாத ஒரு நீண்ட யாத்திரையை செய்துள்ளது.

புனித ஆண்டு சிலுவையைச் சுற்றி உலக இளைஞர் தினங்கள் பிறந்தன, விருத்தியடைந்தன. இளம் கிறிஸ்தவரான உங்கள் நீண்ட பயணத்தில் "அர்த்தமுள்ள இளைப்பாற்று வேளை"களாக விளங்கின. கிறிஸ்து என்னும் பாறை மீது வாழ்வைக் கட்டியெழுப்பும்படி வற்புறுத்தும் இடையறாத அழைப்பாக விளங்கின.

நூற்றாண்டின் இந்த இறுதிப் பகுதியில் இளம் விசுவாசிகள் புதிய மிலேனியத்தை நோக்கி மேற்கொண்டுள்ள பயணத்தைக் குறித்துக் காட்டும் உலக இளைஞர் தினங்களின் பயனாக தனி நபர்களின் இதயத்திலும் திருச்சபை முழுவதிலுமே ஏற்பட்டுள்ள எண்ணற்ற நன்மைகளுக்காக நாம் ஆண்டவரை எவ்வாறு துதிக்காதிருக்க முடியும்?

பல கண்டங்களையும் அளாவிய இச் சிலுவை இப்போது மீண்டும் உரோமாபுரிக்கு திரும்பி வருகிறது. அத்துடன் அது மனுக்குலத்தின் மீது இறைவன் கொண்டுள்ள அன்பின் எளிமையான, புனித அடையாளமென உணர்ந்த எண்ணற்ற இளைஞர்களின் செபங்களையும் அர்ப்பணத்தையும் அது உடன் கொண்டு வருகின்றது. ஏனெனில் மாபெரும் யூபிலி ஆண்டின் நடுவிலே 2000வது ஆண்டின் உலக இளைஞர் தினம் உரோமாபுரியில் இடம்பெறப் போகிறதென்பதை நீங்கள் அறிவீர்கள்.

அன்பான இளம் மக்களே, "இளைஞர் யூபிலி"யாக விளங்கும் திருச்சபையின் இந்த முக்கிய நிகழ்ச்சிக்காக, மகிழ்ச்சியுடன் உரோமாபுரிக்கு திருப்பயணத்தை மேற்கொள்ளுமாறு உங்களை அழைக்கிறேன். புனித வாயிலினூடாக உட்பிரவேசிக்க ஆயத்தமாகுங்கள். இவ்வாயிலினுடாகச் செல்வது அவர் எமக்களித்த புதிய வாழ்வை வாழும் பொருட்டு அவரில் கொண்ட விசுவாசத்தை உறுதிப்படுத்தும் என அறிந்து கொள்ளுங்கள்.

அப்போஸ்தலரான புனித யோவான் இறைவனது மனித அவதார மறைபொருளை விவரிக்கும் "வாக்கு மனுவுருவானார், நம்மிடையே குடி கொண்டார்" என்ற மணியான சொற்றொடரையே 15வது உலக இளைஞர் தினத்தின் கருப்பொருளாக தேர்ந்தெடுத்துள்ளேன். கிறிஸ்தவ மறையை மற்றெல்லா மதங்களிலிருந்தும் வேறுபடுத்துவது என்னவென்றால், நசரேத்தூர் இயேசு என்னும் மனிதன் இறைவனின் திருமகன், மனுவுருவான வார்த்தை. உலகிற்கு வந்த தமதிரித்துவத்தின் இரண்டாவது ஆள் என்ற உறுதிப்பாடாகும்..... கண்ணுக்குப் புலப்படாத கடவுள் தேவதாயான மரியாளின் புதல்வனான யேசு என்னும் ஆளில் உயிரோடு பிரசன்னமாக இருக்கிறார். நசரேத்தூர் இயேசுவே இம்மானுவேல், அதாவது இறைவன் நம்மோடு. அவரை அறிந்தவர் கடவுளை அறிவார்; அவரைக் காண்பவர் கடவுளைக் காண்பார்; அவரைப் பின் செல்பவர் கடவுளைப் பின் செல்வார்; அவரோடு ஒன்றித்தவர் கடவுளோடு ஒன்றிப்பார். பெத்லகேமில் பிறந்த யேசுவில் இறைவன் மனித நிலையை ஏற்று தம்மை அணுகக் கூடியவராக்கி, மனுக்குலத்துடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

புதிய மிலேனியத்தில் அடியெடுத்து வைக்கும் இவ்வேளையில் "தம்மை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் கடவுளின் பிள்ளைகளாகும் உரிமையை அளித்த" (யோவான் 1:12) கிறிஸ்துவுக்கு கதவுகளை அகலத் திறக்கும்படி நான் மீண்டும் உங்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். யேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதாவது, இறைவனை அன்பு செய்வதுடன், எமது சகோதர சகோதரிகள் அனைவருக்கும் எவ்வித வேறுபாடுமின்றி ஒருமைப்பாடு காட்டி அன்பு செய்து வாழவேண்டுமென்ற தந்தையின் கட்டளையை ஏற்றுக் கொள்வதாகும். மனித வரலாறு கேடுகளும் துன்பங்களும் நிறைந்ததாக இருந்த போதிலும், நாம் இறைவனில் வாசம் செய்யக் கூடியதாக அவர் நம்மிடையே குடிகொண்டபடியால், மனித வரலாற்றின் இறுதி வார்த்தை வாழ்வுக்கும் அன்புக்கும் உரியதென விசுவசிப்பதுமாகும்.

தமது மனித அவதாரத்தின் மூலம் கிறிஸ்து ஏழையாகி தமது ஏழ்மையின் மூலம் எம்மை வளப்படுத்தினார். தமது சிலுவை மரணத்தின்போது சிந்திய இரத்தத்தின் பலனான மீட்பை எமக்கு அளித்தார். கல்வாரியில் "அவர் நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்..... நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார்" (ஏசாயா 53:4-5) எமது மீட்புக்காக தமது உயிரையே அளித்த மேலான தியாகம், இறைவன் எம்மீது கொண்ட அளவற்ற அன்புக்கு சான்றாகும். "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு வாழும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்" என்று அப்போஸ்தலரான புனித யோவான் எழுதியுள்ளார். (யோவான் 3:16) பாவம் தவிர்ந்த மற்றெல்லா விதத்திலும் எமது மனித நிலையை ஏற்கும்படியாக கடவுள் அவரை அனுப்பி வைத்தார். மனிதர் பிடிவாதத்துடனும் கொலை வெறியுடனும் அவரை விலக்கி விட்ட போதிலும், அவரது மரணத்தின் மூலம் அவர்கள் ஒப்புரவு அடையும் பொருட்டு அவரை மனிதரிடம் கையளித்தார்.......

இயேசு மரணத்தை எதிர்கொண்டு சென்றார். எம்மோடு இருப்பதனால் ஏற்பட்ட எந்த விளைவுகளிலிருந்தும் அவர் பின்வாங்கவில்லை. எமக்குப் பதிலாக அவர் சிலுவையில் அறையுண்டு எம்மைப் பாவத்திலிருந்தும் கேட்டிலிருந்தும் மீட்டார். உரோம நூற்றுவர் தலைவன் எவ்வாறு இயேசு மரணித்த விதத்தைக் கண்டு, அவர் கடவுளின் குமாரன் என்பதை உணர்ந்து கொண்டாரோ அவ்வாறே நாமும் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைப் பார்த்து தியானிப்பதன் மூலம் இறைவன் உண்மையில் யாரென்பதை உணர்ந்து கொள்ளுகிறோம். ஏனெனில் அவர் இயேசுவில் தாம் மனுக்குலத்தின் மீது கொண்டுள்ள அன்பின் ஆழத்தை வெளிப்படுத்துகிறார். இந்த அன்பு நிபந்தனையற்ற ஒரு கொடையாகும். இயேசு தம் சகோதரருக்காகத் தம் வாழ்வையே அர்ப்பணித்தார். அவரது பாடுகள் அந்த வாழ்வின் உச்சக் கட்டமாகும். இது தந்தையின் உள்ளத்தை எமக்குக் காட்டுகிறது. சிலுவையானது பூமியிலிருந்து மேலே எழுவது போல் தோன்றினாலும் உண்மையில் அது வானிலிருந்து இறங்கி பிரபஞ்சத்தையே தனது அரவணைப்பில் தழுவிக் கொள்கிறது. சிலுவையானது அனைத்து வரலாற்றினதும் ஒவ்வொரு மனித வாழ்வினதும் மையமும், அர்த்தமும், இலக்குமாய் விளங்குகின்றது.

"ஒருவர் அனைவருக்காகவும் இறந்தார்" (2 கொரி 5:14) "கிறிஸ்து உங்களுக்காக நம்மை நறுமணம் வீசும் பலியும் காணிக்கையுமாகக் கடவுளிடம் ஒப்படைத்தார்" (எபே 5:2) இயேசுவின் மரணத்துக்குப் பின்னால் ஓர் அன்புத் திட்டம் உண்டு. திருச்சபை இதனை "மீட்பின் மறைபொருள்" என அழைக்கிறது. மனுக்குலம் முழுவதுமே மீட்கப்படுகிறது. அதாவது பாவத்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு இறையரசுக்குள் இட்டுச் செல்லப்படுகிறது. கிறிஸ்து வானுலகுக்கும் மண்ணுலகுக்கும் ஆண்டவர். அவரது குரலைக் கேட்டு, அவரை அனுப்பிய தந்தையை விசுவசிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர். "உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டி அவரே" (யோவான் 1:29) எம்மைப் போல் துன்புற்றபடியால் எமது பலவீனங்களில் பங்குகொள்ளக்கூடிய தலைமைக் குரு அவரே. சிலுவைப் பாடுகளின் மூலம் "நிறைவுள்ளவராகி, தமக்குக் கீழ்ப்படிவோர் அனைவரும் என்றென்றும் மீட்படையக் காரணமானார்" (எபி 5 : 9).

அன்புள்ள இளைஞர்களே, இந்த மாபெரும் மறைபொருள்களை சிந்தியுங்கள். மரியாள் உலகில் பெற்றெடுத்து, துணிகளால் சுற்றி தீவனத் தொட்டியில் கிடத்தியிருந்த குழந்தையை சற்று நின்று அதிசயத்துடன் நோக்குங்கள். இக் குழந்தை எம்மிடையே எழுந்தருளிய இறைவனேயாவார். சிலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்டு ஏளனம் செய்யப்பட்ட நசரேத்தூர் இயேசுவைப் பாருங்கள். அவர் அனைவருக்கும் மீட்பர். எமக்கான பணயத்தைக் கொடுத்து எம்மைப் பாவத்திலும் மரணத்திலுமிருந்து மீட்ட எமது இரட்சகரான கிறிஸ்துவை ஆராதியுங்கள். அவர் உயிருள்ள இறைவன், வாழ்வின் ஊற்று.

சிந்தியுங்கள்! தியானியுங்கள்! இறைவன் தமது சொந்த வாழ்வில் பங்கு கொள்ளுமாறு எங்களைப் படைத்தார். தமது பிள்ளைகளாக, கிறிஸ்துவின் மறையுடலின் உயிருள்ள அங்கத்தவராக, அன்பின் ஆவியினது ஒளிமிக்க ஆலயங்களாக விளங்கும்படி எங்களை அழைக்கிறார். நாம் அனைவரும் தம்முடையவர்களாக, புனிதர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். அன்பான இளைஞர்களே, அவர் தூயவராக இருப்பது போல், நீங்களும் தூயவராக இருப்பதே உங்கள் இலட்சியமாக இருக்கட்டும்.

ஆனால் புனிதர்களாக இருப்பது இன்று சாத்தியமா? என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். மனித பலத்தை மட்டும் நாம் நம்பியிருந்தால் இந்த முயற்சி உண்மையில் அசாத்தியமானதுதான். உங்கள் வெற்றிகள், தோல்விகள் எவையென்பதை நீங்கள் நன்குணர்ந்திருக்கிறீர்கள். மனிதனை அழுத்தும் சுமைகளையும், அவனை அச்சுறுத்தும் ஆபத்துக்களையும் அவனது பாவங்களின் விளைவுகளையும் உணர்ந்திருக்கிறீர்கள். சிலசமயங்களில் நாம் மனச் சோர்வடையலாம். எம்மிலேயோ உலகிலேயோ எந்த மாற்றத்தையும் கொண்டுவருவது முடியாத காரியம் என்று கூட எண்ணலாம்.

இப் பயணம் கடினமானதாக இருப்பினும் எமது மீட்பரின் துணையுடன் நாம் எல்லோரும் செய்யலாம். ஆகவே இயேசுவைத் தவிர வேறு யாரையும் நாட வேண்டாம். அவர் மட்டுமே தரக்கூடிய ஒன்றுக்காக வேறெங்கும் தேட வேண்டாம். ஏனெனில் "நாம் மீட்புப் பெறுமாறு மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை. இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை" (தி.ப 4:12)

கிறிஸ்துவோடிருந்தால் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் உள்ள இறைத் திட்டமான புனிதத்துவம் சாத்தியமாகின்றது. அவரில் நம்பிக்கை வையுங்கள். நற்செய்தியினை வெற்றி கொள்ள முடியாத வல்லமையை நம்புங்கள். விசுவாசத்தை உங்கள் நம்பிக்கையின் அடித்தளமாகக் கொள்ளுங்கள். இயேசு உங்களோடு பயணம் செய்கிறார். அவர் உங்கள் உள்ளத்தைப் புதுப்பித்து, தமது ஆவியின் சக்தியால் வலுவூட்டுகிறார்.

அனைத்துக் கண்டங்களிலுமுள்ள இளைஞர்களே, புனித மிலேனியத்தின் புனிதர்களகாக் விளங்க அஞ்சாதீர்கள். தியானியுங்கள், செபப் பற்றுள்ளவர்களாயிருங்கள். உங்கள் விசுவாசத்திற்கேற்ப வாழ்பவராகவும். சகோதரருக்குப் பணி செய்வதில் தாரளாமானவர்களாகவும், திருச்சபையின் செயல்திறமுள்ள அங்கத்தவராகவும், சமானத்தைக் கட்டியெழுப்புபவராகவும் விளங்குங்கள். கடினமான இந்த வாழ்வின் செயல்திட்டத்தில் வெற்றியடைய வேண்டுமெனில், அவரது வார்த்தைக்கு தொடர்ந்து செவி கொடுங்கள். திருவருட்சாதனங்களிலிருந்து, முக்கியமாக நற்கருணை, பச்சாத்தாபம் ஆகியவற்றிலிருந்து வலிமையைப் பெற்றுக் கொள்ளுங்கள். நற்செய்தி யின் துணிவுள்ள அப்போஸ்தலராகவும், ஒரு புதிய மனுக்குலத்தை கட்டியெழுப்புபவர்களாகவும் நீங்கள் விளங்க வேண்டுமென ஆண்டவர் விரும்புகின்றார். மனிதனையும் குடும்பத்தையும் சிதைக்கும் அனைத்திற்கும் எதிராக நீங்கள் உறுதியாக நின்றாலன்றி, மனிதன் இறைவனால் படைக்கப்பட்டவனென்று நீங்கள் விசுவசிப்பதாக எவ்வாறு கூற முடியும். ஒவ்வொருவர் மட்டிலும் தந்தை கொண்டுள்ள அன்பை கிறிஸ்து வெளிப்படுத்தினாரென்று நீங்கள் விசுவசித்தால், புதியதொரு உலகை, அன்பு, மன்னிப்பு ஆகியவற்றின் ஆற்றலின் மேல் சகல அநீதிகள், உடல், ஒழுக்க, ஆன்மிக ரீதியான துன்புறுத்தல்களுக்கு எதிரான போராட்டத்தின் மேல் நிறுவப்பட்ட ஒரு உலகை, மனிதனுக்கும் அவனது முழுமையான வளர்ச்சிக்கும் பணி செய்யும்படியாக அரசியல், பொருளாதாரம், கலாசாரம், தொழில்நுட்பம் ஆகியவை திசைமுகப்படுத்தப்பட்ட ஒரு உலகை கட்டியெழுப்பும் முயற்சியில் தளர்வடையமாட்டீர்கள்.

தற்போது அண்மித்திருக்கும் யூபிலியானது துணிகரமான ஆன்மீக புதுப்பித்தலுக்கும், இறைவன் மனுக்குலத்தின் மீது கொண்டுள்ள அன்பை விசேட விதமாய்க்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடுவதற்கும் ஒரு தகுந்த தருணமாக இருக்க வேண்டுமென விரும்புகிறேன். கிறிஸ்துவின் மூலம், புனிதர்களின் சக குடிமக்களாகவும், இறைவனது திருவீட்டின் அங்கத்தவர்களாகவும் நாம் இருக்கும்படியாக அருள் செய்த அன்புத் தந்தைக்கு முழுத் திருச்சபையிலிருந்தும் புகழ்ச்சிப் பாடலும் நன்றிப் பாடலும் எழுவதாக, அப்போஸ்தலரான புனித பவுல் கூறிய உறுதிப்பாட்டிலிருந்து நாம் ஆறுதல் பெறுவோமாக. "தம் சொந்த மகனென்றும் பாராது அவரை நம் அனைவருக்காகவும் ஒப்புவித்த கடவுள் தம் மகனோடு அனைத்தையும் நமக்கு அருளாதிருப்பாரோ? சாவு உட்பட வாழ்வின் எல்லா நிகழ்ச்சிகளிலும், சிலுவைமட்டும் நம்மேல் அன்பு கூர்ந்தவரின் செயலால் அனைத்திலும் நாம் வெற்றி மேல் வெற்றி அடை கின்றோம்." (உரோ.8:31-37)

இறைமகனின் மனிதாவதாரமும், அனைத்து மக்களுக்கும் அவர் ஏற்பாடு செய்த மீட்பும் எமது விசுவாசத்தின் மையச் செய்தி ஆகும். பல நூற்றாண்டுகளாக, உலகின் தப்பான விளக்கங்கள் துன்புறுத்தல்கள் மத்தியிலும் இறைவன் தந்த ஆறுதலைப் பெற்று திருச்சபை இதனை ஓர் அரும்பொருளாக தனது மக்களிடம் அதனை ஒப்படைக்கின்றது.

அன்பான இளைஞர்களே, நீங்களும் இந்த முது சொத்தைப் பெறுபவர்களும் அதன் பொறுப்பாண்மையாளருமாய் இருக்கிறீர்கள். "இதுவே எமது விசுவாசம். இதுவே திருச்சபையின் விசுவாசம். எமதாண்டவர் இயேசு கிறிஸ்துவில் இதனை அறிக்கையிடுவதில் பெருமையடை கிறோம்." (உறுதிப்பூசுதல் திருச்சடங்கு) நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து அடுத்து வரும் உலக இளைஞர் தினத்தில் இதனை அறிக்கையிடுவோம். அதில் உங்களில் அநேகர் பங்கு பற்றுவீர்கள் என நம்புகிறேன். உரோமாபுரி ஒரு நகர ஆலயமாகும். அங்குள்ள புனித பேதுரு, புனித பவுல் மற்றும் மறைசாட்சிகளுடைய ஞாபகச் சின்னங்கள் திருமுழுக்குப் பெற்ற ஒருவரின் அழைப்பை யாத்திரிகருக்கு நினைவூட்டுகின்றன. அடுத்த ஆண்டு ஆகஸ்டில், புனித பேதுரு அப்போஸ்தலர் அறிக்கையிட்டது போல் நாமும் எமது விசுவாசத்தை அறிக்கையிடுவோம். "ஆண்டவரே, நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன" (யோவான் 6:68)

"நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்" (மத். 16:16) மேலும் அடுத்த நூற்றாண்டில் வளர்ந்தோராக விளங்கப் போகும் இளைஞர் யுவதிகளே இவ்வாண்டு நத்தார் திருவிழிப்பின் போது திருக்கதவினூடாக முதலில் பிரவேசிக்கும் திருத்தந்தை, வாழ்வின் ஊற்றாகவும் மூன்றாவது மிலேனியத்தின் நம்பிக்கையாகவும் திருச்சபைக்கும் உலகுக்கும் எடுத்துக் காட்டும் "வாழ்வின் புத்தகம்" உங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றது.

அது உங்கள் அரிய பொக்கிஷமாக இருப்பதாக! ஆண்டவரின் வார்த்தையை ஆர்வத்துடன் ஏற்று கவனமாகப் படிப்பதன் மூலம் உங்கள் அன்றாட வாழ்வுக்கு ஊட்டத்தையும் சக்தியையும் பெற்றுக் கொள்வீர்கள். ஒரு அன்பின் நாகரிகத்தை கட்டியெழுப்புவதில் அயராத ஈடுபாட்டிற்கு வேண்டிய செயல் நோக்கத்தையும் அதில் காண்பீர்கள்.

இப்போது நாம் இறைவனின் தாயாகிய கன்னி மரியாளை நோக்கி எமது கண்களைத் திருப்புவோமாக. கிறிஸ்தவ மக்கள் பக்தியுடன் அவளுக்கு அர்ப்பணித்த காலத்தால் முந்தியதும் மிகுந்த வணக்கத்துக்குரியதுமான நினைவுச் சின்னம் ஒன்று உரோமாபுரியில் செல்வமெனப் போற்றப்படுகின்றது. அதுதான் மேரிமேஜர் பேராலயம்.

திருவார்த்தையின் மனித அவதாரமும், மனுக்குல மீட்பும் மங்கள வார்த்தை அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சியுடன் நெருங்கிய தொடர்புடையன. உங்களைப் போன்ற இளவயதினளான மரியாளுக்கு இறைவன் தமது திட்டத்தை வெளிப்படுத்தியபோது, அவளிடத்திலே தமது அன்பின் செயற்பாட்டுக்கு முற்றும் திறந்துள்ள ஓர் இதயத்தைக் கண்டார். பல நூற்றாண்டு காலமாக திரிகாலச் செபம் சொல்லுவதன் மூலம் இறைவன் மனித வரலாற்றில் பிரவேசித்த நிகழ்ச்சியை கிறிஸ்தவர்கள் தினந்தோறும் பக்தியுடன் நினைவு கூர்ந்து வருகின்றனர். இந்தச் செபத்தை தினந்தோறும் தியானத்துடன் சொல்லி வருவீர்களாக.

நீதியின் உதய சூரியனாகிய எமது மீட்பர் கிறிஸ்துவுக்கு முன் வரும் விடியல் தான் மரியாள். தந்தையின் திட்டத்துக்குத் அவள் தன்னை பூரணமாகக் கையளித்து "ஆம்" என்று பதிலிறுத்ததால் திருமகனின் மனித அவதாரத்தை சாத்தியமாக்கியதுடன் அவள் அதை வரவேற்றாள். முதற் சீடரான அவள் அடக்கமான பிரசன்னத்துடன் கல்வாரி மலைமட்டும் இயேசுவோடு உடன் சென்றாள். இயேசுவின் உயிர்ப்பையும் தூய ஆவியின் வருகையையும் காத்திருந்த அப்போஸ்தலரின் நம்பிக்கைக்கு உரமூட்டினாள். திருச்சபையின் வரலாற்றிலே அவள் தொடர்ந்து மறைபொருளாக ஆண்டவரின் வருகைக்கு முன்சென்று கொண்டிருக்கிறாள். திருச்சபையின் தாயாகவும் ஒவ்வொரு கிறிஸ்தவனின் தாயாகவும் விளங்கும் தனது பணியை இடையறாது நிறைவேற்றிவரும் மரியாளிடம் 15வது உலக இளைஞர் தினத்துக்குரிய ஆயத்தத்தை நம்பிக்கையுடன் ஒப்படைக்கிறேன். அன்பான இளைஞர்களே, பரிசுத்த மரியாள் உங்கள் வாழ்வில் பரலோக தந்தையின் சித்தத்தை அறிந்து கொள்ள கற்றுத் தருவாளாக. இறைவனோடு பேசவும் இறைவனைப் பற்றிப் பேசவும் தேவையான ஞானத்தையும் வலிமையையும் உங்களுக்கு அவள் பெற்றுத் தருவாளாக. தனது முன்மாதிரியால், புதிய மிலேனியத்தில் நம்பிக்கையையும். அன்பையும் சமாதானத்தையும் அறிவிப்பவர்களாக விளங்க உங்களுக்கு துணைபுரிவாளாக.

அடுத்த ஆண்டு உரோமாபுரியில் உங்களில் அநேகரை சந்திக்கக் காத்திருக்கின்றேன். "நான் உங்களைக் கடவுளிடம் ஒப்படைக்கின்றேன். அவரது அருள் வார்த்தைக்கும் கட்டுப்படுவீர்களாக. அவ் வார்த்தை வளர்ச்சியையும் தூயோர் அனைவருக்குமுரிய உரிமைப் பேற்றையும் உங்களுக்குத் தரவல்லது" (தி.ப 20:32) அதேவேளையில் மகிழ்ச்சியுடனும் மிகுந்த அன்புடனும் உங்களனைவரையும், உங்கள் குடும்பங்களையும் உங்கள் அன்பிற்குரியவர்களையும் ஆசிர்வதிக்கின்றேன்.

# அன்பிய வாழ்வே நற்கருணை வாழ்வின் வெளிப்பாடாகும்

அருள்திரு C.J. அன்ரனிபாலா

தொடர்ச்சி ...

ஏனெனில் "புதுப்பித்துப் பகிரும் திருச்சபையாக மலர" என்னும் கருத்தில் நாம் இன்னும் பழைமையில் ஊறி இருக்காமல் காலத்தில் அறிகுறிகளின் ஊடாக இறைவனின் குரலை உணர்ந்து இறைவார்த்தையை உள்ளத்தில் இருத்தி எம் வாழ்வில் இறைவன் செய்த வல்லமையுள்ள செயல்களையும், எமக்குள்ளவற்றையும் பகிர்ந்து, எமது விசுவாசத்தைப் புதுப்பித்து, எழுந்து எம் தந்தையிடம் செல்ல வேண்டும் என்பதே தொனிக்கிறது.

கடந்தகால வரலாற்றைக் பார்க்கின்றபோது, நாம் நடந்து வந்த பாதையும் அதன் கசப்பான அனுபவங்களும், கடின மனங்களால் விளைந்த அவலங்களும் ஓர் புதுப்பித்தல் நிச்சயம் தேவை என்று எமக்கு உணர்த்துகின்றன. நாம் ஊற்றுக்குத் திரும்பவேண்டும். ஆதித் திருச்சபையின் வாழ்க்கை முறை ஏறக்குறைய மறக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. "தேவையில் உழல்வோர் எவரும் அவர்களுள் காணப்படவில்லை. நிலபுலன்களை அல்லது வீடுகளை உடையோர் அவற்றை விற்று அந்தத் தொகையைக் கொண்டுவந்து திருத்துதருடைய காலடியில் வைப்பர். அது அவரவர் தேவைக்கு தக்கவாறு பகிர்ந்து கொடுக்கப்படும்." தி.பணி. 4:34-35. ஆதித் திருச்சபையில் வறுமைப்பட்ட நிலையில் எவரும் இருக்கவில்லை. ஏனெனில் அங்கு கிறிஸ்தவம் வாழப்பட்டது. "அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறை வேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்" (தி.பணி. 2:42) உண்மையாக கிறிஸ்துவின் போதனை வாழப்படுவதாக இருந்தால், ஓர் கிறிஸ்தவ சமுதாயம் கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்கு உன்னத மதிப்பளித்து வாழ்வதாக இருந்தால், நிச்சயமாக அந்த சுற்றம் சூழலில், வறுமைப்பட்டநிலையில், நோயுற்றநிலையில், கைவிடப்பட்ட நிலையில் எவரும் இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. அவ்வாறு எவராவது இருந்தால் அங்கு கிறிஸ்தவம் வாழப்படவில்லை என்பதே ஆணித்தரமான உண்மையாகும்.

## எமது சமுதாயச் சீர்கேடுகள்!

கடந்தகால தசப்பான உண்மைகளை எடுத்து ஆராயும்போது, சாதியின் பெயராலும், சமய அடிப்படைவாதத்தின் பேராலும், பணக்காரன் - ஏழை, படித்தவன் - பயாதவன், உயர்ந்த பரம்பரை - தாழ்ந்த பரம்பரை என்ற வறட்டுக் கௌரவங்களாலும் ஆணவ, சுயநல செருக்காலும் எமது திருச்சபை மக்கள் பல்வேறு வடிவங்களில் பிளவுபட்டு நிற்பது இன்றும் இது தொடர்கதையாகிறது. பாரிய, கலைநயமுடைய ஆலயங்களைக் கட்டி அழகுபார்த்து, சாதிக்கொரு கோயில் அமைத்து அயலவனைத் தள்ளிவைத்து, ஆலயத்திற்குள்ளே கோடு வரைந்து வழிபாட்டு உரிமை அருட்சாதன உரிமை மறுக்கப்பட்ட சம்பவங்களை நாம் மறந்துவிட முடியாதவாறு அவற்றின் எச்சசொச்சங்கள் பல இடங்களில் நீறுபூத்த நெருப்பாகவும் ஒருசில இடங்களில் காற்றடிக்கும் வேளை நீறுகலைந்து தலைகாட்டுவதாகவும் உள்ளன. இதற்கு கடந்தகாலத்தில் திருச்சபை மறைமுகமாகவோ துணைபோன காரணத்தால், அதாவது பாரிய தீமைகளைத் தடுக்க கனம் குறைந்த தீமைகளை அனுமதித்து வளரவிட்டதன் காரணமாக இன்றும் இவை மேலோட்டமாக புதைந்துள்ள நச்சுவேர்களாக உள்ளன.

இடம்பெயர்வுகளும் சொல்லொணா வேதனைகளும் இவற்றிற்கு முற்றுப்புள்ளி இட்டனவா? என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அன்றைய நாட்களில் கொடிகட்டிப் பறந்து, நெஞ்சு நிமிர்த்தி, கொடியேற்ற வாண வேடிக்கை ஆதிக்கம் செலுத்தி, தங்கச் சங்கிலி போட்டு அழகுபார்த்து சுரூபப் பவனிகளிலும் ஏனைய செயற்பாடுகளிலும் பரம்பரை வேறுபாட்டு வெறிகளை நிலைநாட்டி, தற்போது இடம்பெயர்வுகளாலும் போரின் கோர வடுக்களாலும் தூசிதட்டிப் பராமரிக்கக் கூட ஆட்கள் இல்லாமல் போய்விட்ட வழிபாட்டு இடங்களும் எமக்கு "புதுப்பித்து பகிரும் திருச்சபையாக மலர" என்ற அறைகூவலையே விடுக்கின்றன. ஆயினும் இடம்பெயர்வின் அவலங்களால் கூட மாற்றம் பெறமுடியாமல் மீண்டும் மீண்டும் பழைய பல்லவியைப் படிக் கொண்டிருப்பவர்களால் பங்குபற்றும் திருச்சபையாக மலர்வது என்பது முடியுமாவென்றால் அது கேள்விக்குறியாகவே காலமெல்லாம் இருந்துவிடப் போகும் ஒரு அபாய எச்சரிக்கையாக ஒலிக்கின்றது. இவையெல்லாம் எமக்கு ஒன்றை உணர்த்தி நிற்கின்றன. அதாவது மக்களது வாழ்வும் வழிபாடும் இணையவில்லை என்பதாகும். எமது வாழ்விற்கும் வழிபாட்டிற்கும் வெகுதூரம் என்பதை உணரவில்லை. வாழ்விற்கு வழிபாட்டிலிருந்து அர்த்தம் தேடும் மானிட சமூகமாக நாம் மாறவில்லை.

பழைமைகள் எல்லாம் தீமையானவை என்று நாம் முற்றாக ஒதுக்கிவிடாமல் "தம் கருவூலத்தில் இருந்து புதியவற்றையும் பழையவற்றையும் வெளிக்கொணரும் வீட்டு உரிமையாளரைப் போல்" (மத். 13:52) என்னும் இயேசுவின் வார்த்தைக்கு ஏற்ப, நாம் ஆவியின் துணைகொண்டு நன்மை எது? தீமை எது? என இனம்கண்டு நடக்க முயற்சி எடுக்க வேண்டும். கடந்தகாலத்தில் இடம்பெற்ற உரிமைப் பிரச்சினைகள், போட்டி பூசல்கள்கடின மனங்களால் விளைந்த அவலங்களை ஒருபுறம் நீக்கிவைத்துப் பார்க்கின்ற போது, வேதாகமப் பிரதிகள் கைகளில் கிடைக்காத அக் காலத்தில் இடம்பெற்ற திருச்செபமாலை செபித்தல், திருச்சிலுவைப்பாதை சுற்றி தியானித்தல், நற்கருணை ஆராதனையில் பங்குபற்றுதல் போன்ற பக்தி முயற்சிகளும் திருச்செபமாலை, வெரோணிக்கம், திருச்சிலுவை, ஆசீர்நீர் போன்ற அருட்கவிகளை பரவலாக வீடுகளில் பயன்படுத்திய தன்மைகளும் பக்தியருட்சியின் காரணமாக இடம்பெற்ற புனிதர் வணக்கங்களும் கொள்ளைநோய் பயம் காரணமாக இடம்பெற்ற கூத்து நாடகங்களும் சொரூப பவனிகளும் திருவிழாக் கொண்டாட்டங்களும் பக்திச்சபைளில் பங்கெடுத்தலும் விசுவாச ஆழப்படுத்தலுக்கும் விசுவாசக் கையளிப்பிற்கும் உதவின என்பதை நாம் மறுக்க முடியாது.

## மனமாற்றம் வேண்டும்.

ஆயினும் ஆதிக்கிறிஸ்தவரின் வாழ்வில் விளங்கிய உன்னத பண்புகள் மறக்கப்பட்டுவிட்ட நிலையை ஏற்றுக்கொள்ளும் நாம் எல்லோரும் ஒரே தந்தையின் பிள்ளைகள் என்பதை உணர்ந்து புதுப்பித்துப் பகிர்ந்து, அயலவர் துன்பத்தில் பங்குபற்றும் திருச்சபையாக மலர வேண்டும். எனவே நற்கருணையின் ஆண்டாக எமக்குத் தரப்பட்டுள்ள இவ் ஆண்டில் எமது உள்ளங்களில், இல்லங்களில் ஆலயங்களில் எமது அயலவர் மத்தியில் நாம் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளைப் பற்றி சிறிது சிந்திப்போம். *(மிகுதி அடுத்த இதழில் தொடரும்...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சை மாதிரி வினாத்தாள் (9,10,11 ஆகிய தரங்களை உள்ளடக்கியது)

## கிறிஸ்தவம் (றோ.க.) பகுதி – 1

**1 முதல் 30 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் மிகப் பொருத்தமான விடையை தெரிவுசெய்து கோடிடுக.**

**1. 'புகழ்பாடும் நற்செய்தி' என்று அழைக்கப்படும் நற்செய்தி நூல் யாது?**
1. மத்தேயு நற்செய்தி 2. மாற்கு நற்செய்தி 3. லூக்கா நற்செய்தி 4. யோவான் நற்செய்தி

**2. திருமுழுக்கின் மூலம் பெறும் விசுவாச வாழ்வினால் நாம் பெற்றுக்கொள்ளும் உன்னத கொடை**
1. இறைவனின் கட்டளைகள் 2. திருச்சபையின் உறுப்பினர்கள் 3. ஞானச் செல்வங்கள் 4. நித்திய வாழ்வு

**3. பாவசங்கீர்த்தனத்தின் போது இனிப் பாவம் செய்வதில்லை என்று நாம் எடுக்கும் தீர்மானம் எதில் தங்கியுள்ளது?**
1. செய்த பாவங்களைச் சிந்திப்பது 2. உண்மையான மனஸ்தாபத்தில் 3. குருவிடம் அறிக்கையிடுவதில் 4. மன்னிப்பு ஆசீர்பெறுவதில்

**4. சுத்திகரிப்புச் சடங்கை நிறைவேற்றுவதற்காக இயேசுவை ஆலயத்திற்குக் கொண்டுசென்று காணிக்கையாக்கிய நிகழ்வு எமக்கு தெளிவுபடுத்துவது**
1. நாட்டு வழக்கங்களையும் சமய சடங்குகளையும் இயேசு மதித்தார்.
2. சிமியோனிடம் ஆசிர் பெறவேண்டும் என்பதற்காக.
3. யூத சட்டத்தை அனுசரிக்காது வாழமுடியாது என்பதற்காக
4. தாம் மெசியா என்பதை அனைவருக்கும் அறிவிப்பதற்காக

**5. மோயீசனுக்கு இறைவன் தெய்வமலையில் தோன்றிய வடிவம்**
1. மேகத்தூண் வடிவம் 2. நெருப்புக் கொழுந்து வடிவம் 3. பெரும் புயற்காற்று மூலம் 4. வெண்கலப் பாம்பு வடிவம்

**6. கடவுள் தாம் படைத்த பொருளுக்கு கொடுக்காத சக்தி அப் பொருளில் மறைந்திருப்பதாகக் கூறுவது எத்தகைய பக்தி?**
1. புகழ்ச்சிப் பக்தி 2. ஆராதனை 3. குருட்டுப்பக்தி 4. சகுனம்

**7. கடவுள் தமது உள்ளரங்க உண்மைகளை எமக்கு வெளிப்படுத்தி இருப்பது எதன் வழியாக?**
1. படைப்பின் வழியாக 2. மனித சாயலின் வழியாக 3. ஒரேகடவுள் மூன்று ஆட்கள் வழியாக 4. வல்லமை வழியாக

**8. கடன் திருநாட்களில் திருச்சபை எதனை சிறப்பாக கொண்டாடுகிறது?**
1. மரியாளின் பிறப்பை 2. மீட்பின் பரம இரகசியங்களை 3. கிறிஸ்துவின் பிறப்பை 4. படைப்பின் மேன்மையை

**9. கடவுளின் அன்பும் இரக்கமும் எமக்கு சிறந்த முறையில் வெளிப் படுத்தப்பட்டது எவ்வாறு?**
1. புனிதர்களினால் 2. திருச்சபை வழியாக 3. இயேசுக் கிறிஸ்துவினால் 4. அப்போஸ்தலர் வழியாக

**10. நாம் தீமையை விலக்கி நன்மையைப் புரிய இறைவன் எமக்கு அளித்த கொடை**
1. பத்துக் கட்டளைகள் 2. மனச்சான்று 3. விசுவாசம் 4. வாழ்வு

**11. இயேசுக் கிறீஸ்து அலகையை எதிர்த்து நிற்பதற்குக் காலாக அமைந்தவர்?**
1. பரிசுத்த ஆவி 2. அப்போஸ்தலர் 3. மரியன்னை 4. திருமுழுக்கு யோவான்

**12. 'அவனியில் அமைதி' என்ற சுற்றுமடலை எழுதிய திருத்தந்தை**
1. ஆறாம் சின்னப்பர் 2. 23ஆம் அருளப்பர் 3. 10ஆம் பத்திநாதர் 4. 13ஆம் சிங்கராயர்

**13. உன் கைகள் வேலை செய்யட்டும் ஆனால், உன் இருதயம் கடவுளுடன் ஈடுபட்டிருக்கட்டும் எனக் கூறிய புனிதர் யார்?**
1. புனித அகுஸ்தீனார் 2. புனித மரியகொறற்றி 3. புனித ஞானப்பிரகாசியார் 4. புனித றீற்றம்மாள்

**14. ஞானஸ்நானத்தை நிறைவு செய்யும் திருவருட்சாதனம் எது?**
1. நற்கருணை 2. குருத்துவம் 3. உறுதிபூசுதல் 4. மெய்விவாகம்

**15. உறுதிபூசுதல் அருட்சாதனத்தின் வழியாக நாம் எவற்றுடன் போர்புரியும் உறுதிபாட்டைப் பெறுகின்றோம்?**
1. உடல், திருச்சபை, பசாசு 2. உலகம், உடல், பசாசு 3. உலகம், கிறிஸ்து, சாவு 4. இறையரசு, நற்செய்தி, ஆன்மா

**16. மனித வளர்ச்சியின் உச்சநிலை எனக் கொள்ளப்படுவது யாது?**
1. மரணம் 2. வாழ்வு 3. துன்பம் 4. அவனது உயிர்ப்பு

**17. நோயுற்றவர்கள் தங்கள் வேதனைகளை கிறிஸ்துவின் திருப்பாடுகளுடன் ஒப்புக்கொடுக்கும் போது அவர்கள் பங்கேற்கும் பணி**
1. புனித வாழ்வுப் பணி 2. அப்போஸ்தலிக்கப் பணி 3. நோயாளிகளின் அப்போஸ்தலிக்கப் பணி 4. சிலுவைப் பணி

**18. அப்போஸ்தலரான புனித சின்னப்பருக்கு ஒப்பிடப்படும் புனிதர் யார்?**
1. புனித ஆசீர்வாதம் 2. புனித வின்செனற் தே பவுல் 3. புனித லோறன்சியார் 4. புனித சிலுவை அருளப்பர்

**19. எல்லாச் சமூகங்களிலும் மிகப் பெரிய வியத்தகு சமூகமாகத் திகழ்வது எது?**
1. திருச்சபைக் குழுமம் 2. உலக மனித சமூகம் 3. ஆதிக் கிறிஸ்தவ சமூகம் 4. புனிதர்களின் சமூதீத பிரயோசனம்

**20. 'நம் பெற்றோர் கடவுளின் பதிலாளிகள்' ஏன்?**
1. எம்மைப் பெற்றெடுத்தவர்கள் 2. எமது தேவைகளை நிறைவு செய்பவர்கள் 3. நாம் விண்ணகம் சேருவதற்கு நமக்கு வழிகாட்டியால் உள்ளவர்கள் 4. எம் திருச்சபையின் உறுப்பினர்கள்

**21. பிறர் பாவம் செய்வதற்கு ஒருவன் காரணமாக இருப்பது**
1. கன்ம பாவம் 2. சென்ம பாவம் 3. சாவான பாவம் 4. இடறல் பாவம்

**22. தியாக்கோன் பட்டத்தினைப் பெற்றவர்கள் அளிக்கக் கூடிய திருவருட் சாதனங்கள் எவை?**
1. உறுதிபூசுதல், நற்கருணை 2. குருத்துவம், திருமுழுக்கு 3. திருமணம், கிறிஸ்துவின் ஞானஸ்நானம் 4. நோயில் பூசுதல், நற்கருணை.

**23. புனித ஆசீர்வாதப்பர் ஒழுங்குப்படி அவர்களது சபையின் முக்கிய குறிக்கோள் எது?**
1. ஒன்றாய் கூடி செபித்து வாழ்தல் 2. அநாதைகளைப் பராமரித்தல் 3. ஆசிரியப் பணிகளை மேற்கொள்ளல் 4. நோயுற்றோரைப் பராமரித்தல்

**24. நாம் பிறரது சொத்தை தகுந்த முறையில் சம்பாதிக்காது விடுவது.....?**
1. பிறருக்கு நாம் இழைக்கும் தீங்காகும் 2. பிறரது உரிமைக்கு எதிரான பாவம் 3. இறைகொள்கைக்குச் சார்பான பாவம் 4. ஒவ்வொருவனும் அன்புக்கெதிராகச் செய்யும் பாவமாகும்.

**25. வீண் ஐயப்பாட்டிற்கு முரணான செயல் எனக் கருதப்படுவது?**
1. உடலை மதிக்காமை 2. பிறரைப் பற்றித் தவறாக எண்பிப்பது 3. பொய்ச் சான்று கூறுவது 4. விசுவாசத்தை மறுதலிப்பது

**26. திருச்சபையின் திருவழிபாட்டு முறை ஆண்டிலேயே சிறந்த வழிபாடாக அமைவது எது?**
1. பாஸ்காத் திருவிழிப்பு 2. நத்தார் திருவிழிப்பு 3. நவதின வழிபாடுகள் 4. சிலுவைப் பாதை

**27. கபிரியேல் தூதன் தேவதாய்க்கு மங்கள வர்த்தை கூறிய திருநாளாக அமைவது**
1. மார்கழி - 8 2. புரட்டாதி - 8 3. ஆவணி - 15 4. பங்குனி - 25

**28. கிரேக்க மொழியில் "கிறிஸ்தோஸ்" என்னும் சொல் குறிக்கும் பொருள்**
1. மெசியா 2. கிறிஸ்து 3. மீட்பர் 4. இறைவாக்கினர்

**29. கத்தோலிக்க சபைதான் கிறிஸ்துநாதரின் உண்மையான திருச்சபை என்று சான்று பகரக் காரணமாக அமைந்தது என்ன?**
1. உரோமையைத் தலைமைப்பீடமாகக் கொண்டதினால் 2. உலகெங்கும் பரந்து இருப்பதனால் 3. பரிசுத்த இராயப்பரின் வழிவந்த வாரிசாக இருப்பதினால் 4. அவருடைய போதனையின்படி வாழ்வதினால்

**30. நாம் கொண்டாடும் இவ் யூபிலி ஆண்டு எதன் நிறைவான யூபிலி ஆண்டாக அமைந்துள்ளது?**
1. கிறிஸ்து பிறப்பின் 2000 ஆண்டு நிறைவு 2. திருச்சபை பிறப்பின் 2000 ஆண்டு நிறைவு 3. கிறிஸ்தவ ஒன்றிப்பின் 2000 ஆண்டு நிறைவு 4. மரியாளின் பிறப்பின் 2000 ஆண்டு நிறைவு

## க.பொ.த. சாதாரண தரம் - கிறிஸ்தவம் (றோ.க.) - II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக?**

1. (அ) இறைவன் நமக்கு அளித்த 'அருள் உயிர்' என்னும் கொடையினால் நாம் பெற்ற உரிமைகள் எவை?
(ஆ) கடவுளைச் சார்ந்த புண்ணியங்கள் எவை?
(இ) புதுப்பிறப்பின் அருட்சாதனம் என திருமுழுக்கு அழைக்கப்படக் காரணம் என்ன?
(ஈ) இரத்த ஞானஸ்நானம் என்றால் என்ன?
(உ) எத்தகைய திருமுழுக்கை நாம் பெறவேணடுமென இயேசு நிக்கொதேமுவிற்கு கூறினார்?

2. (அ) கடன் திருநாட்களில் நாம் எதனை விசேட விதமாக நினைவு கூருகின்றோம்?
(ஆ) நாம் அனுசரிக்கும் கடன் திருநாட்கள் எவை?
(இ) மறையுரை கேட்பது அவசியமானது ஏன்?

3. (அ) நாம் ஏன் எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனை அன்பு செய்ய வேண்டும்?
(ஆ) நாம் இறைவனை அன்பு செய்கிறோம் என்பதை எவ்வாறு எம் செயல்களில் காட்ட முடியும்?
(இ) நமக்காக இறைவனிடம் பரிந்து பேசிச் செபிப்பவர்கள் யார்?

4. (அ) இறையரசின் மதிப்பீடுகள் ஐந்து குறிப்பிடுக?
(ஆ) இயேசுவின் மலைப்பொழிவில் இறையரசை சுட்டிக் காட்டி நிற்கும் இரு பெறுபேறுகளும் எவை?
(இ) ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொருவரது விடுதலைக்காக உழைப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ கடமையாக உள்ளது விளக்குக?

5. (அ) பெந்தக்கொஸ்தே திருநாளின் போது பரிசுத்த ஆவியைப் பெற்ற அப்போஸ்தலர்களிடம் காணப்பட்ட இயல்புகள் எவை?

(ஆ) ஒவ்வொரு கிறிஸ்தவனதும் பெந்தக்கொஸ்தே நாளாக அமைவது எந்நாள்?

(இ) உறுதிபூசுதல் வழியாக தூய ஆவி எம்மில் எவ்வாறு செயலாற்றுகின்றார்?

6. (அ) மறைசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாக அமைந்தது எவ்வாறு என விளக்குக?

(ஆ) புனித ஞானப்பிரகாசியார் பற்றி ஐந்து வசனங்கள் எழுதுக?

(இ) மறைசாட்சிகளின் மரணம் உமது வாழ்வில் நற்செய்தியின் பொருட்டு ஏற்படுத்தியுள்ள விளைவுகளைக் குறிப்பிடுக?

7. (அ) திருமணம் ஓர் அருள்தான நிலைக்கு உயர்த்தப்பட்டது எவ்வாறு?

(ஆ) கத்தோலிக்க திருமணம் பயனுள்ளதாக அமைய அத்தியாவசியமானவை எவை?

(இ) திருமண அருட்சாதனத்தின் வழியாய் இயேசுக்கிறிஸ்து திருமண தம்பதிகளை எவற்றில் உறுதிப்படுத்துகின்றார்?

## பகுதி - 1 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | 3 | (11) | 1 | (21) | 4 |
| (2) | 4 | (12) | 2 | (22) | 3 |
| (3) | 2 | (13) | 4 | (23) | 1 |
| (4) | 1 | (14) | 3 | (24) | 2 |
| (5) | 2 | (15) | 2 | (25) | 2 |
| (6) | 3 | (16) | 4 | (26) | 1 |
| (7) | 3 | (17) | 3 | (27) | 4 |
| (8) | 2 | (18) | 2 | (28) | 2 |
| (9) | 3 | (19) | 4 | (29) | 3 |
| (10) | 2 | (20) | 3 | (30) | 1 |

## பகுதி - 2 விடைகள்

1. (அ) i கடவுளின் பிள்ளைகள் ஆகிறோம்
ii கிறிஸ்துவின் சகோதரர்
iii நித்திய முடிவில்லா வாழ்வைப் பெறுகின்றோம்.

(ஆ) விசுவாசம், நம்பிக்கை, பரம அன்பு

(இ) கிறிஸ்து நமது ஆன்மாவில் ஓர் அழியாத முத்திரையைப் பதிப்பதிலும் என்றும் அவருடைய சீடர்களாக விளங்குவதாலும் திருச்சபையின் கூட்டுறவில் ஏற்றுக்கொள்ளப்படுவதினாலும் நீரினாலும் ஆவியினாலும் கழுவப்படுவதினாலும் அது புதுப்பிறப்பின் அடையாளமாக விளங்குகின்றது. அதாவது அங்கு புதியவாழ்வு ஒன்றை ஆரம்பிக்கிறோம்.

(ஈ) ஒருவன் ஞானஸ்நானம் பெறமுன் வேதசாட்சியாக தன் உயிரைக் கொடுத்தால் அவன் தன் இரத்தத்திலேயே ஞானஸ்நானம் பெற்று புனிதமாக்கப்பட்டு மோட்சத்தில் வேதசாட்சிகளின் முடிவைப் பெற்றுவருகின்றனர். அவர்களது இத் தன்மை 'இரத்த ஞானஸ்நானம்' என அழைக்கப்படுகின்றது.

(உ) நீரினாலும் ஆவியினாலும் புதுப்பிறப்படைந்து கிறிஸ்துவிற்குள் புதிய வாழ்வு வாழும் திருமுழுக்கினை பெறவேண்டும் என இயேசு நிக்கொதேமுவிற்குக் கூறினார்.

# கட்டுரைப் போட்டி

## யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு

### பொதுநிலையினர் தினத்தை முன்னிட்டு நடாத்தும் கட்டுரைப் போட்டி

**"ஆதிக் கிறீஸ்தவர்களின் (அப்போ. பணி. 2:42) சாட்சிய வாழ்வு இன்றைய மண்ணின் நிகழ்வுகளில் உணரப்படுகிறதா" (500 சொற்கள்)**

**இப் போட்டிக்கான விதிகளும் குறிப்புகளும்**

1. பொதுநிலையினர் எவரும் பங்குபற்றலாம்.

2. ஆக்கம் பெயர் முகவரி இட்டு பங்குத்தந்தையால் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.

3. ஆக்கம் பொ.நி.தினமான 2000-11-20ஆம் திகதிக்கு முன்பாக "செயலாளர் பொ.நிலையினர் ஆணைக்குழு, ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

4. தரமான முதல் மூன்று ஆக்கங்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும். முதலாவது இடத்தைப் பெறும் கட்டுரை பாதுகாவலன் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். பொதுநிலையினர் ஆணைக்குழுவின் தீர்ப்பே இறுதியானது.

**செயலாளர்,
பொ.நி. ஆணைக்குழு,
யாழ். மறைமாவட்டம்.**

2. (அ) கடன் திருநாட்களில் நமது மீட்பின் பரம இரகசியங்களைத் திருச்சபை நினைகூர்ந்து கொண்டாடப்படுகிறது.

(ஆ) கிறிஸ்து பிறப்புவிழா - மார்கழி - 25
கிறிஸ்து விண்ணகத்திற்கு எழுந்தருளின திருநாள், தேவதாயின் மாசில்லாத உற்பவத் திருளாள் - மார்கழி - 8 தேவதாயின் விண்ணேற்புத் திருநாள் - ஆவணி - 15. ஒவ்வோர் ஞாயிறு திருநாட்களும்.

(இ) மறையுரை கேட்பதன் வழியாக நம் விசுவாச உண்மைகளை நன்கு அறிந்து அதன்படி வாழ அழைக்கப்படுவதனால் நாம் மறையுரை கேட்பது அவசியமாகிறது.

3. (அ) தந்தையாம் இறைவனே எம்மை உருவாக்கி நாமும் ஒருநாள் வானரசில் சேரவேண்டும் என இறைவன் விரும்புவதனாலும், கடவுள் தமது அன்பினால் உலகமக்கள் அனைவருக்காகவும் மீட்பைப் பெற்றுத்தர கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பியதாலும் பரிசுத்த ஆவியினால் எம் உள்ளங்களைப் புதுப்பித்தது எது? எம் மீது பொழிவதனாலும் இறைவனை நாம் அனைத்திற்கும் மேலாக அன்பு செய்ய வேண்டும்.

(ஆ) இறைவனைப் பற்றி அடிக்கடி நினைக்க வேண்டும். அவருடன் விருப்பமுடன் உரையாட வேண்டும். அவருடைய பரிசுத்த விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். அயலார் மீது நாம் கொள்ளும் அன்புக் கரிசனை வழியாகவும் இறைவனை அன்பு செய்கிறோம் எனக் கூற முடியும்.

(இ) இயேசுக்கிறீஸ்து, பரிசுத்த ஆவி, பரிசுத்த கன்னிமரியாள், புனிதர்கள்

4. (அ) i உண்மை, நீதி, அன்பு என்பவற்றை எம் வாழ்வில் வாழ்தல்
ii பழிவாங்காது மன்னித்தல், பொறுமையோடு வாழ்தல்
iii உண்மையான சகோதர வாழ்வில் ஈடுபடுதல்
iv இடையறாது செபவாழ்வில் ஈடுபடுதல்
v முழுமையான மனமாற்றத்தை எம்மில் கொண்டு வாழுதல்

(ஆ) (i) ஏழையரின் உள்ளத்தோர் பேறு பெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது.
(ii) நீதியின் பொருட்டுத் துன்புறுத்துவோர் பெறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது.

(இ) ஒவ்வொரு கிறிஸ்தவனும் தான் மீட்படைவது மட்டுமன்று பிறரது மீட்பிற்காகவும் உழைக்க வேண்டும் என்பது ஞானஸ்நானத்தின் வழியாக அவன் பெற்றுக்கொண்ட அழைப்பாகும்.

5. (அ) (i)அப்போஸ்தலர் ஒவ்வொருவர் மேலும் பரிசுத்த ஆவி வந்து இறங்கியதை உணர்ந்து திடம் பெற்றார்.
(ii) புத்தித் தெளிவடைந்து மெய்யியறிவைப் பெற்றனர்
(iii) இயேசு அவர்களுக்கு கூறிய உண்மைகளை எல்லாம் நினைவிற்குக் கொண்டுவந்தனர்.
(iv) புதிய மனவலிமை பெற்றனர்.
(v) கோழைத்தனத்தையும் அச்சத்தையும் நீக்கி கிறிஸ்துவின் நற்செய்தியைத் துணிவுடன் போதித்தனர்.
(vi) விசுவாசத்திற்காகத் தம் உயிரையே அர்ப்பணித்தனர்.

(ஆ) அவனது உறுதிபூசுதல் நாள்

(இ) (i) எம்மை புனிதப்படுத்துகின்றார்
(ii) நமது விசுவாசத்தை மன உறுதிப்பாட்டுடன் செயற்படுத்தும் வலிமையை அளிக்கின்றார்.
(iii) பசாசு, உலகம், உடல் போன்ற உலகின் தீமையை எதிர்த்துப் போராடும் வலிமையை அளிக்கின்றார்.
(iv) அப்போஸ்தலர்களாகச் சேவைபுரிவதற்காகவும் கிறிஸ்துவுடன் இணைந்து பணிபுரியவும் நம்மைப் பண்படுத்துகின்றார்.
(v) நற்செய்திக்குச் சான்றுபகரவும் அதனை அறிவிக்கவும் எம்மை வழிநடத்துகின்றார்.

6. (அ) கிறிஸ்துவிற்காக மரித்த மறைசாட்சிகள் கூட்டம் திருச்சபையின் முடிவில்லாத பெருமைக்குக் காரரணமாக உள்ளது. ஏனெனில் திருமறைக்காக அவர்கள் சிந்திய இரத்தமே திருச்சபையின் உறுதியான அடித்தளத்திற்குக் காரணமாக அமைந்தது. இவர்கள் தூய ஆவியால் நிரப்பப்பட்டு நற்செய்தியின் ஒளிப்பிழம்பாக உலகிற்கு சான்று பகர்ந்தமையால் இறையரசின் உண்மையான போர்வீரர்களாகி உயிர்துறந்தமையால் இவர்களது இரத்தம் திருச்சபைக்கு வித்தாக அமைந்தது.

(ஆ) (i) புனித ஞானப்பிரகாசியாரின் வாழ்வு உண்மையான கிறிஸ்தவ வாழ்வுக்கு ஒரு சாட்சியமாக விளங்குகிறது.
(ii) இவரது வாழ்வு இளைஞர்களைப் புண்ணிய வாழ்வுக்கு அழைத்தது.
(iii) சுகபோக வாழ்வு கிடைத்ததும் அதில் தன்மனதைச் செலுத்தாது இறைபணிக்காகத் தன்னை அர்ப்பணித்தவர்.
(iv) மிகுந்த இறைபக்தியும் நற்பண்பும் கொண்டவராய் விளங்கினார்.
(v) பாவிகளின் ஈடேற்றத்திற்காகத் தமது வாழ்வின் பெரும் பகுதியை அர்ப்பணித்தவர்.

(இ) இம்மறை சாட்சிகளைப் போன்று கிறிஸ்விற்காகவும் அவரது போதனையாகிய நற்செய்திக்காகவும் சான்றுபகர்ந்து உண்மையான விசுவாசத்தின் போர் வீரர்களாக உருவாக அழைக்கின்றது.
நாமும் புனிதராகலாம் என்னும் விசுவாசத்தை வளர்க்கிறது.
சவால்கள் மத்தியிலும் தியாகம் நிறைந்த வாழ்விற்கு அழைப்பு விடுக்கிறது.

7 (அ) இயேசுக்கிறிஸ்து தமது சிலுவை மரணத்தால் திருமணத்தைப் புனிதப்படுத்தி அதை வரப்பிரசாதத்தின் ஒரு கால்வாயாக அமைத்தார். மேலும் இயேசுக்கிறிஸ்து தம் பத்தினியாகிய திருச்சபையுடன் கொண்டுள்ள அருள் நிரம்பிய ஒன்றிப்பின் உருவமாக திருமணம் இருப்பதனாலும் அதனை அவர் அருட்சாதன நிலைக்கு உயர்த்தினார்.

(ஆ) (i) உண்மையான கத்தோலிக்க விசுவாசம்,
(ii) மெய்யான அன்பு
(iii) நம்பத்தகுந்த நடத்தை
(iv) போதுமான உடல்நலம்
(v) வாழ்க்கை நடாத்தப் போதிய பொருளாதாரம்

(இ) மெய்விவாகம் என்னும் திருவருட்சாதனத்தில் கிறிஸ்துநாதர் கணவனுக்கும் மனைவிக்கும் அபரிதமான வரங்களை அளிக்கிறார். அவர்கள் இருவரும் சாகுமளவும் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாக இருக்கவும் தங்கள் மணவாழ்வின் கடமைகளைப் பிறழாது நிறைவேற்றவும் அவர்களைப் புனிதப்படுத்தி உறுதிப்படுத்துகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைபணியாளர்களின் மாதம் மறைபணியாளர்களின் மாதம் மறைபணியாளர்களின் மாதம்

கிளரீசியன் சபை உம்மை அழைக்கிறது

## "அகில உலகனைத்துக்குமே என் ஆவி"

— புனித அந்தோனி மேரி கிளாரட் —

யூபிலி ஆண்டின் ஒக்டோபர் மாதம், கிளரீசியன் சபையினருக்கு முக்கியமான மாதம். இவ் 24ஆம் திகதி சபை நிறுவுனர் கிளாரட்டின் திருநாளை நினைவுகூறும் வேளையில், இவர் ஒரு சிறந்த மறைபணியாளராக தன் வாழ்வை அர்ப்பணித்தார் என்று குறிப்பிடுவதில் மகிழ்கின்றோம்.

"நீரும் திராட்சைத் தோட்டத்திற்குச் செல்லும்" – மத். 20:7

என்று பரிசுத்த தந்தை (2ஆம் அரு. சின்னப்பர்) யூபிலி ஆண்டில் கூறும் மறைபரப்புச் செய்தி உங்கள் உள்ளத்தை விழிப்படையச் செய்கின்றதா?........

**அன்பு இளைஞனே!**

நீர் இளைய தலைமுறையினரின் கண்ணாடி! இனி மலரும் சமுதாயத்தின் முன்னோடி! உம்மால் வாழ்வு பெற எம் சமுதாயம் எதிர்நோக்கிக் காத்துக் கிடக்கின்றது. உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட ஸ்பெயின் நாட்டின் சமூக வாழ்வில் ஒளி ஏற்றிய வள்ளல் தான்

## "புனித கிளாரட்"

மக்கள் கிறிஸ்துவை அறியாது வாழ்ந்து வந்த காலத்தில் தனியாகச் செயற்படுவதைக் காட்டிலும் இன்னும் சில குருக்களுடன் சேர்ந்து செயற்பட்டால் அதிக பலன் விளைவிக்க முடியும் என்று கருதிய கிளாரட் தன்னோடு இளமைத் துடிப்பும் சகோதர அன்பும் கொண்ட ஐந்து குருக்களுடன் சேர்ந்து 1849ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16ஆம் திகதி "மரியாயின் மாசற்ற இதய மைந்தர்கள்" என்ற பெயரில் இச் சபையை நிறுவி,

சகல வசதிகளையும் வளங்களையும் நற்செய்திப் பணிக்காக நபர்கள், நேரங்கள், தளங்கள் ஆகியவற்றை நெறிப்படுத்தி எதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமோ அதற்கு : "உடனடியாக நேரக்கணிப்புடன், சக்தி மிகு செயலூக்கத்துடன்" தெளிந்த மன உறுதியுடன் உரம் ஊட்டி அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஏழை மக்கள் தம் உரிமை வாழ்வை பெற்றிட என்ற நோக்கத்தோடு பணிபுரிய.........,

நீரும் விரும்புகின்றீரா?............
ஓர் மறைபோதகராக, சமூகப் பணியாளராக, தியானக் குருவாக,
ஆசிரியராக, பிணி தீர்க்கும் நல் மருத்துவராக, சகோதரராக,
உளநல உருவாக்குனராக, மக்கள் தொடர்புசாதன வெளியீட்டாளராக,
செய்ற்பட்டுச் சிறக்க..........

**உங்களையும் எம்மோடு இணைந்து பணியாற்ற அழைக்கிறோம்**

உம்முடன் நாம் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

*யாழ். மறைமாவட்டத்தில்*
*இறை அழைத்தல் இயக்குனர்,*
*கிளரீசியன் மறைபணியாளர்,*
*கிளாரட் அகம்,*
*15, கொழும்புத்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*ஏனைய மறைமாவட்டத்தில் :*
*இறை அழைத்தல் இயக்குனர்,*
*கிளரீசியன் மறைபணியாளர்,*
*55, ராகம வீதி,*
*வெலிசர.*

நீரும் திராட்சைத் தோட்டத்திற்குச் செல்லும் மத். 20.7

**யாழ். மறை மாவட்ட சமூகத் தொடர் சாதன ஆணைக்குழு நடாத்திய சமூகத் தொடர்பு சாதனங்களுக்கு ஓர் அறிமுகம்**

# பயிற்சிப் பாசறை திறன் ஆய்வு

யாழ். மறைமாவட்ட சமூகத் தொடர்புசாதன ஆணைக்குழுவினால் சமூக தொடர்புசாதனங்களுக்கு ஓர் அறிமுகம் என்னும் தலைப்பில் ஒரு பயிற்சிப் பாசறை யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி இறையியல் இறுதியாண்டு அருள்சகோதரர்க்காகநடாத்தப்பட்டது. மேற்படி பாசறையானது தைத் திங்கள் 28,29,30ம் திகதிகளில் இவ் ஆணைக்குழுவின் தலைவர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளையின் தலைமையிலும் வழிகாட்டலிலும் இடம்பெற்றது.

பத்திரிகையியல், சினிமா, கணனி ஆகிய தொடர்பு ஊடகங்களை மையப்படுத்தி இடம் பெற்ற இப் பட்டறையின் நிகழ்வுகள் முதல் நாளாகிய 29ஆம் திகதி அன்று இறைவணக்கத்துடன் ஆரம்பமானது. அருள் திரு ரூபன் மரியாம்பிள்ளையின் வரவேற்புரையைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை தலைவர் அன்ரன் மத்தாயஸ் அடிகளாரால் "கிறிஸ்துவும் சமூகத் தொடர்புசாதனங்களும்" என்னும் தலைப்பில் ஒருகருத்துரை வழங்கப்பட்டது. இக் கருத்துரையில் கிறிஸ்துவின் மறை அறிவிப்புப் பணி யாது? எவ்வாறு திருத்தூதர்கள் அவற்றை தொடர்ந்தாற்றினார்கள் எனவும் இன்று மறை அறிவிப்புப் பணியில் எம் கடமையும் பொறுப்பும் யாது? என்பது பற்றியும் அவற்றில் சமூகத் தொடர்புசாதனங்கள் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது எனவும் மிகவும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில் சமூகத் தொடர்புசாதனங்கள் தவறான வழியில் தவறான நோக்குடன் தற்காலத்தில் பாவிக்கப்படுவதையும் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி ஆராய்ந்து, சமயத் தலைவர்கள் என்ற வகையில் எமது பொறுப்பும் பணியும் யாது எனவும் கலந்தாலோசிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாதுகாவலன் பிரதமஆசிரியர் அருள் திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரால் "பத்திரிகையியலுக்கு ஓர் அறிமுகம்" என்னும் பொருளில் கருத்துரை வழங்கப்பட்டது. இவ்வுரையில் பத்திராதிபரின் குணவியல்புகள், திறன்கள், செய்தித்தாள் ஒழுங்கமைப்பு என்பன பற்றி கருத்து வழங்கப்பட்டது. தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில் அருள்தந்தையின் எழுத்துலக அனுபவம், வளர்ச்சி பற்றிய பகிர்வும், அதன் ஊடாக பல அனுபவ அறிவையும் பெற முடிந்தது. முதல்நாள் காலை நிகழ்வின் இறுதி விடயமாக "ஓவ்செற்" அச்சுமுறை பற்றி விளக்கமும் அதற்கான பிளேற் தயாரிப்பு முறையும் திரு. பெனடிக்சன் அவர்களால் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தின் இயந்திரவிய [illegible]குதியில் செயற்பாட்டு [illegible]ம் கொடுக்கப்பட்டது.

அன்றைய நாளின் மதிய நிகழ்வாக பாண்டியன்தாழ்வுப் பங்குத்தந்தை அருள்திரு. இ.ம.வி. இரவிச்சந்திரன் அடிகளாரினால் திரைப்பட திறனாய்வு பற்றிய ஒரு விளக்கமும் எவ்வாறு ஒரு திரைப்படத்தை திறனாய்வு செய்வது எனவும் எடுத்துரைக்கப்பட்டது. பயிற்சிக்காக "முகங்கள்" என்னும் திரைப்படமும் காண்பிக்கப்பட்டு அப் படம் அடிகளாரின் உதவியுடன் திறனாய்வும் செய்யப்பட்டது.

இரண்டாம் நாள் நிகழ்வுகளும் இறைவேண்டலுடன் ஆரம்பிக்கப்பட்டு "யாழு வீடியோ" உரிமையாளர் திரு. ரஜீவனினால் வீடியோ படப்பிடித்தல் பற்றி விளக்கமும் பயிற்சியும் வழங்கப்பட்டது. ஒவ்வொருவரும் தனித்தனியே பயற்சியும் வழங்கப்பட்டது. ஒவ்வொருவரும் தனித்தனியே பயிற்சி பெற்றது பயனுள்ள விடயமாகவும் எதிர்காலத்துக்கு பிரயோசனமானதாகவும் காணப்பட்டது.

அன்றைய தின மதிய நிகழ்வாக கணனி, மின் அஞ்சல், இன்ரநெற் துறை பற்றிய விளக்கமும் பயிற்சியும் IIS கணனிப் பயிற்சி நிலைய விரிவுரையாளர் திரு. எஸ். பிரபாகரனினால் வழங்கப்பட்டது. மூன்றாவது யுகத்தின் உயிராகவுள்ள இலத்திரனியல் தொடர்பான இச் சாதனங்களைப் பற்றி குறுகிய நேரத்தில் கூடிய அறிவைப் பெற்று பலன் அடைந்தமை இப் பட்டறையில் குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமைந்தது.

மூன்றாம் நாள் நிகழ்வாக காலை முதல் மாலை வரை ஒவ்வொரு பயிற்சியாளரும் தனித் தனியாக வீடியோ படப்பிடிப்புக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டு பின் அதன் அடிப்படையில் திறன் ஆய்வும் குறிப்புக்களும் திரு. ரஜீவனினால் வழங்கப்பட்டது. இத்துடன் சமூகத் தொடர்பு சாதனங்களுக்கான மூன்று நாள் பட்டறை இனிதே நிறைவு கண்டது. எதிர்கால குருக்களாக திகழவுள்ள இவ் இளைய அருட்சகோதரர்கள் மறை அறிவிப்பு பணியில் சமூகத் தொடர்புசாதனங்களை கையாளவும் பயன்படுத்தவும் அதனூடாக மறை அறிவிப்புப் பணியை மேற்கொள்ளவும் இவ் மூன்று நாள் பயிற்சிப் பாசறை துணை செய்தது என்றால் மிகையாகாது.

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி 4ம் ஆண்டு இறையியல் மாணவர்களின் தொகுப்பினை எழுத்தினில் தந்தவர்

அருள்சகோதரர்.
A.S.றொசான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநிலையினர் தினச் சிறப்பிதழ் (26-11- 2000)

### கிறீஸ்து அரசர் பெருவிழா

## அன்பியங்களில் சாட்சிய வாழ்வு வாழத் துணிவோம்

### ஆயரின் வாழ்த்துச் செய்தி

உலகில் புளிக்காரம் போல் இருந்துகொண்டு உலகைப் புனிதப்படுத்த பொதுநிலையினர் தாம் பெற்ற திருமுழுக்கின் வழியாக அழைக்கப்படுகின்றனர். உலகியல் அமைப்பை புதுப்பிப்பதை தமக்குரிய பணியாக பொதுநிலையினர் ஆக்கிக் கொள்ளவேண்டுமென திருச்சபை அழைப்பு விடுக்கிறது. ஒவ்வொரு மறைமாவட்டமும் பங்கேற்கும் திருச்சபையின் தலத் திருச்சபைகளாக மாற வேண்டும் என்பது அனைவரதும் விருப்பமாகும்.

பொதுநிலையினர் எடுக்கும் இவ் விழாவின் மையக்கருத்தாக "அன்பியங்களில் சாட்சிய வாழ்வு வாழத் துணிவோம்" என்ற அறைகூவல் மிகவும் பொருத்த மானதாகவும் சிறப்பானதாகவும் விளங்குகின்றது. மறைமாவட்டம் முழுவதிலும் எடுக்கப்படும் இவ் அன்பிய முயற்சிகளுக்கும் இன்னும் அனைத்து அப்போஸ்தலிக்க பணிகளுக்கும் பொதுநிலை இறைமக்கள், வளர்ந்தோர், இளைஞர்கள், சிறுவர்கள், அளிக்கும் பங்களிப்பை மிகவும் பாராட்டுகிறோம். இன்னும் பொது நிலையினர் யாழ். திருச்சபைப் பணிகளில் ஆர்வமுடன் முழுமனதாக செயற்பட இறையருள் வேண்டி அனைவருக்கும் ஆசீர் அளிக்கிறோம்.

## கிறீஸ்து அரசர் விழாவும் பொதுநிலையினர் தினமும்

ஏன்?

### அருள்திரு பா.பி. இராஜசிங்கம்

கிறீஸ்து அரசர் விழா திருவழிபாட்டு ஆண்டின் இறுதிவழா. திருவழிபாட்டு ஆண்டில் நடைபெறும் விழாக்களுக்கெல்லாம் கொடுமுடியாக அமைவது இவ் விழாத்தான். எனவே இவ் விழாவில் பொதுநிலையினர் தினத்தை எவ்வாறு கொண்டாட முடியும்? அப்படிக் கொண்டாடுவதாயின் அதன் சிறப்பு அமசம் என்ன? இது முறையா? வேறு நாட்களில் இதனைக் கொண்டாட முடியாதா? என்ற பல கேள்விக் கணைகள் பலரிடத்திலே தொடுக்கப்பட்டன. இக் கேள்விகள் அனைத்தும் நியாயமானவைதமான். ஆனாலும் கிறீஸ்து அரசர் விழாவும் பொது நிலயினர் தினமும் ஒருங்கே கொண்டாடப்படுவது மிகவும் பொருத்தமானதும் பொதுநிலையினர் ஒவ்வொருவரின் கிறீஸ்தவ விசுவாச வாழ்வை ஆழப்படுத்து வதாகவும் அமைகின்றது. காரணம், கிறீஸ்து இயேசுவின் முப்பணிகளான அரச, குருத்துவ, இறைவாக்குப் பணிகளில் பொதுநிலையினரான நாம் அனைவரும் பங்குகொண்டு கிறீஸ்து இயேசுவைப் போன்று ஓர் அர்ப்பண வாழ்வு வாழ கிறீஸ்து அரசர் விழா எம்மை அழைக்கின்றது.

*(தொடரும்)*

## எமது மண்ணின் போரும் யாழ். திருச்சபையின் நற்செய்தி அறிவிப்பும்

### - கிறீஸ்துவின் கட்டளை -

"விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டி ருக்கின்றது. எனவே நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்..."மத். 28:19

இயேசுக் கிறீஸ்துவின் இந்த நற்செய்தி அறிவிப்புக் கட்டளையைத் தன் தலைமேற்கொண்டு இயங்கிவருகிறது நம் தாய்த் திருச்சபை. நற்செய்தி அறிவிப்பின் அதிசிறந்த மாதிரி இயேசுக் கிறீஸ்துவே. அவரைத் தொடர்ந்து அப்போஸ்தலர்கள், அவர்களின் நேரடிப் போதனையைக் கேட்ட ஆதிக் கிறீஸ்தவர்களின் சாட்சிய வாழ்வு, புனிதர்களின் புனித வாழ்வு இவர்களெல்லாம் நற்செய்தி அறிவிப்பின் சிறந்த மாதிரிகைகளே.

### - திருத்தந்தையின் அறைகூவல் -

இயேசுக் கிறீஸ்துவின் கட்டளை, அதை ஏற்று செயற்பட்டுவரும் திருச்சபை இவ்வாறிருக்க, புதிய ஆயிரமாம் ஆண்டில் திருத்தந்தை 2ஆம் அருளப்பர், சின்னப்பர் விடுத்த அறைகூவல் குறிப்பாக ஆசிய திருச்சபையின் தலைமேல் சுமத்தப்படுகின்ற பெரும் கடமையாகவும் அமைகின்றது. அதாவது "ஆசியாவில் திருச்சபை" என்னும் தமது சுற்றுமடலிலே முதலாவது ஆயிரமாம் ஆண்டில் அமெரிக்க நாடுகளிலும் இரண்டாவது ஆயிரமாம் ஆண்டில் ஆபிரிக்க நாடுகளிலும் விசுவாச விதைகள் விதைக்கப்பட்டன. அவை வளர்ந்தன விருட்சமாகின. நிழல் கொடுத்தன. அவ்வாறே இப் புதிய மூன்றாவது ஆயிரமாம் ஆண்டில் ஆசியா முழுவதும் விசுவாச விதைகள் விதைக்கப்பட வேண்டும் என்று கேட்டு நிற்கின்றார்.

இவ்வாறு திருத்தந்தையினூடாக இறைவன் ஆசியத் திருச்சபைக்கு விடுக்கின்ற சிறப்பான அழைப்பு இது; காலத்தின் தேவையிது; அவசிய பணியிது; பல மதங்களைத் தன்னகத்தே கொண்டும் அவற்றின் தொட்டிலாகவும் விளங்கும் ஆசியாக் கண்டத்திலே நற்செய்தி அறிவிப்பதென்பது மிகவும் கஷ்டமான பணி; தியாகங்கள் செய்ய வேண்டிய பணி; உயிரையே கையளிக்க வேண்டிய பணி. இவற்றிறினூடாக நற்செய்தி அறிவிப்புப் பணி முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். இதுவே நற்செய்தி அறிவிப்புப் பணியும் கூட.

### - இன்றைய யாழ். திருச்சபை -

இந்த வகையில் யாழ். மறைமாவட்டத்தின் நற்செய்திப் பணியை நோக்குவது சாலச் சிறந்ததாகும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ். மறைமாவட்டத்திலே கிறிஸ்துவை அறிந்தவர்களிலும் பார்க்க அறியாதவர்களே ஏராளம். கிறிஸ்துவை அறியாத இவர்கள் ஏராளமாக இருக்குமட்டும் யாழ். திருச்சபைப் பணியின் கனாகனம், அதன் பொறுப்பு மிகப் பெரிதாகவே இருக்கும். அதனாலே அது தன் பணியை விறுவிறுப்புடன், உறுதி யுடன், தொடர்ச்சியுடனும் செய்ய வேண்டியது இன்றியமையாதது. கிறிஸ்துவை அறியாத மக்களுக்கும், இடங்களுக்கும் நற்செய்தி கொண்டு செல்லப்பட வேண்டும். இந்தக் "கொண்டுசெல்லும்" பணியிலே எமக்கு நெருக்கமான முன்மாதிரிகையாகத் திகழ்கின்றவர்கள் கிறிஸ்துவின், அப்போஸ்தலர்களின் வழி நின்ற புனித யோசவ்வாஸ், அருள்திரு ஞானப்பிரகாசர் அடிகளார் அருள்திரு பிலிப் பொன்னையா அடிகளார் போன்றோரைக் குறிப்பிடலாம்.

ஆனால் இன்று நற்செய்தியைக் கொண்டு செல்வது என்பது யாழ். திருச் சபையில் மிக மிக அரிதாகப் போய்விட்டது என்றே சொல்லலாம். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தைகளை அது உரியமுறையில் பராமரிக்காததனால் அவை சிதறடிக்கப்படுவதும், திருடப்படுவதும் நோய்வாய்ப்பட்டு முறிந்திருந்த வேளையிலே அவற்றுக்கு மருந்து போட்டுக் கட்டுப்போடாததும் இன்றைய யதார்த்தம். (எசே. 34:1-10) மந்தைகளின் பிரமாணிக்கமின்னை, விசுவாசத்தில் அவை ஆழவேரூன்றாத் தன்மை, அவைகளின் சாட்சியமில்லா வாழ்வு போன்றவையும் மந்தைகளின் சிதறல்களுக்கு காரணம் என்பதை மறுக்கவும் முடியாது. அமைப்பு ரீதியான செயற்பாடுகளுக்கு அது (யாழ். திருச்சபை) அழுத்தம் கொடுக்கின்ற காரணத்தால் "நற்செய்தியைக் கொண்டு செல்லல்" என்பது பெரும்பாலும் கைநழுவிப் போய் விட்டதொன்றானது. இவ்வாறு அமைப்பு ரீதியான செயற்பாடுகள் இறுக்கம் பெற்றன. உடைக்கப்படக் கூடாதவையாகின. அமைப்புக்களை விட்டு வெளியேற முடியாத நிலையும் அமைப்பாளர்களுக்கு ஏற்பட்டது.

### - எமது மண்ணின் போர் -

இது இவ்வாறு இருக்க எமது மண்ணில் நடந்து கொண்டிருந்த போர் பூதாகரமாகியது. அதன் கொடிய விளைவுகள், இடம் பெயர்வுகள், பொருளழிவுகள், உயிரழிவுகள், உறவுப் பிரிவுகள் நிரந்தரமாகிவிட்டன. குறிப்பாக 1990ஆம் ஆண்டு தொடங்கிய 3ஆவது ஈழப்போரோடு மூன்றோடு இடம்பெயர்வுகளை தவிர்க்க முடியாதவையாகிவிட்டன. 1995ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒட்டுமொத்த யாழ். மக்களின் இடப்பெயர்வு யாழ். திருச்சபை வரலாற்றில் குறிப்பிடப்பட முடியாமல் இருக்க முடியாது.

### - போர் தரும் செய்தி -

இந்த இடம்பெயர்வினை அரசியல், பொருளாதார சமூகக் கண்ணோட்டங்களோடு ஏனையவர்கள் பார்க்க முற்படுகின்ற போது நாங்கள் விசுவாசக் கண்ணோட் டத்தோடு பார்க்காமல் இருக்க முடியாது; இருக்கவும் கூடாது. காரணம் அது எமது பணியிள் வளர்ச்சிக்கு உதவும் என்பதே.

எனவே விசுவாசக் கண்ணோட்டத்தோடு நாம் பார்க்கும் போது இந்த இடம்பெயர்வு அமைப்பு ரீதியான யாழ். திருச்சபையின் பணிக்குக் கொடுக்கப்பட்ட சவுக்கடி என்றே நாம் சொல்ல வேண்டும். அமைப்புகளுக்குள் முடங்கிக் கிடந்த அதன் பணிகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்பதற்கான சவுக்கடியே இந்த இடம்பெயர்வு; நகரை மையப்படுத்திய ஆணைக்குழுக்களின் மையங்கள் வட மராட்சி, தென்மராட்சி வன்னிப் பிரதேசங்களுக்குச் சென்றன. அங்கு அதன் பணிகள் குறிப்பிடத்தக்க அளவில் இல்லையென்றாலும் ஓரளவு முன்னெடுக் கப்பட்டன. ஆனால் மீண்டும் யாழ். வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதும் திரும்பி வந்த மக்களோடு சிதறுப்பட்டிருந்த அமைப்புகளும் திரும்பி வந்தன. மீண்டும் நகரை மையப்படுத்தியதாக அதன் செயற்பாடுகள் அமையத் தொடங்கின. ஒருசில ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் போரின் முன்னும் சரி, பின்னும் சரி "கொண்டு செல்லும்" பணியில் ஓரளவு ஈடுபட்டிருந்ததை மறுக்கமுடியாது.

எமது மண்ணில் நடந்து கொண்டிருக்கின்ற போர், அதன் விளைவுகளான அழிவுகள், இடம்பெயர்வுகள் என்பன நற்செய்தி அறிவிப்பதற்காக எமக்குக் கொடுக்கப்பட்ட அரிய சந்தர்ப்பங்கள் என்றே சொல்ல-வேண்டும். ஜெருசலேமுக்கு வெளியே நற்செய்தி முதன் முதல் எடுத்துச்செல்லப்படக் காரணமாயிருந்தது, ஸ்தேவானின் வேதசாட்சிய மரணத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற கிறிஸ்தவர்களின் இடம்பெயர்வே. சிதறுப்பட்டுப் போன மக்கள் தாம் சென்ற இடங்களிளெல்லாம் (யூதேயா, சமாரியா) தாம் அறிந்து அனுபவித்த கிறிஸ்துவை அறிவித்தார்கள். (தி.ப. 8); கிறிஸ்தவ குழுமங்களைக் கட்டியெழுப்பினார்கள். இத்தகைய அவர்க ளின் இறையரசைக் கட்டியெழுப்பும் சாட்சிய வாழ்வு எம் மத்தியில் மிக மிக அரிதாகப் போய்விட்டது வேதனைக்குரியதொன்றே. கிறிஸ்துவை அறியாத மக்கள் வாழ்ந்த புதிய, புதிய இடங்களில் (இடம்பெயர்வு காரணமாக) எமது நடமாட்டங்கள் அமைந்திருந்த போதும் ஒரு குழுமத்தையாவது கட்டியெழுப்பாமல் போனது வேதனைக்குரியதே. கட்டிய வீட்டையும் சேர்த்த செல்வத்தையும் இழந்து வெறுங் கையராய் நின்ற மக்கள் வாழ்வில் நிலையானதையும் நிலையற்றதையும் எடுத்துச் சொல்ல எமக்கு தரப்பட்டவர்களே. அமைதியிழந்து, ஆறுதலிழந்து. துன்ப துயரச் சுமைகளோடு நின்ற மக்கள் இளைப்பாறுதல் தரும் ஆண்டவரிடம் கூட்டிச் செல்லப்பட எம் கரங்களில் கொடுக்கப்பட்டவர்களே. விழுந்து வெடிக்கின்ற ஷெல்களும் அவற்றோடு சிதறுகின்ற உடல்களும் அவற்றிலே சிந்தப்படும் இரத் தங்களும், பறிபோகும் உயிர்களும் சோதோம் கொமோராவின் நெருப்பு மழையை யும் (தொ.நூ. 18,19) ராமாவில் புலம்பலையும் இராக்கேலின் அழுகையையும் (மத். 2:17-18) இயேசுவின் சிலுவைப் பாடுகளையும் மரணத்தையும் சுட்டிநிற்கின்றன, என்று சொல்ல எமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களே. நடந்துகொண்டிருக்கின்ற இடம்பெயர்வுகளும் அதனால் ஏற்படுகின்ற சோர்வுகளும் எகிப்து நோக்கிய குழந்தை இயேசுவின் இடம்பெயர்வையும் அவரது அகதி நிலையையும் எடுத்துச் சொல்லி அவர்களை உறுதிப்படுத்த கிடைத்த சந்தர்ப்பங்களே.

கோயிலும் பங்குமனையும் என்ற பங்குத் திருச்சபையின் அமைப்பு முறை, சாதீயத்தின் இரும்பு வலைக்குள் சிக்குண்டிருந்த வழிபாட்டு முறை, கிறிஸ்தவ வாழ்க்கை முறை என்பவற்றை உடைத்தெறிந்த அந்த இடம்பெயர்வு "ஆவியிலும் உண்மையிலும் வழிபட வாருங்கள்" (யோவா. 4:20-26) என்று அழைக்கக் கிடைத்த சந்தர்ப்பமே. திருச்சபை என்பது கல்லினால் கட்டப்பட்ட கோயிலை, கட்டடங்களை மையப்படுத்தியது அல்ல மாறாக அது இறைமக்கள் என்ற கோவிலை மையப்படுத்தியது என்ற உண்மையைச் சொல்ல சிதறுப்பட்டிருந்த கிறிஸ்தவர்கள், எமக்குக் கொடுக்கப்பட்டவர்களே. மீண்டும் யாழ். நகர் (தம் சொந்த இடங்கள்) நோக்கிய மக்களின் நகர்வுகள் (1996 சித்திரை) எஸ்ராவாக, நெகேமியாவாக நின்று மக்களை ஆயத்தப்படுத்த கிடைத்த சந்தர்ப்பங்களே.

### - முடிவாக -

எனவே ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்ற பொழுது போரும் அதன் கொடிய விளைவுகளும் கிறிஸ்துவின் நற்செய்தியை எடுத்துச் செல்ல யாழ். திருச்சபைக்கு ஏதுவாய் இருந்த காரணிகளாகும். பங்கு மட்டத்திலே, மறைக்கோட்ட மட்டத்திலே யாழ். மறைமாவட்டம் முழுவதும் வியக்கும் எண்ணம் பரபரப்புடன் பெரும் எதிர்பார்ப்புகளுடன் அரங்கேறிய "புதுப்பித்துப் பரபரப்புடன் பகிரும் திருச்சபையாக" என்னும் மேய்ப்புப் பணி மாநாடு வெற்றியளிக்காமலே போய்விட்டது.

எவ்வளவோ நல்ல நல்ல கருத்துக்கள் செயற்பாட்டு முறைகள் இந்த மாநாட்டின் மூலம் வெளிக்கொணரப்பட்டது. ஆனால் பெரும்பாலானது நடைமுறைப்படுத் தப்படவில்லை. இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அன்பிய முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவை. ஒரு சில பங்குகளில் அவை அறுபதும் நூறுமாகப் பலன் கொடுத்தன. ஆனால் காலப்போக்கில் பல்வேறுபட்ட காரணங்களினால் அவை சோர்ந்ததாயிற்று. நோயுற்ற நிலைமையைப் பார்க்கக்கூடியதாக உள்ளது.

எனவே கடந்த இடம்பெயர்வுகளின் போது யாழ். திருச்சபை தன் பணியை செவ்வனே செய்யத் தவறியதனால் மீண்டும் மீண்டும் அது இடம்பெயர்வை சந் திக்க வேண்டியுள்ளது. காரணம் நற்செய்தியை அறிவித்து இறையரசைக் கட்டியெழுப்ப வேண்டுமென்பதற்காகவேயொழிய அழிந்துபோக வேண்டுமென் பதற்காக அல்ல.

**Fr. றெக்ஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் நினைவில் நீங்காத ஆண்டு 25



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 - 12 - 1908 | 22 - 10 - 1975 |

### திரு யோவான் எலியாஸ்

"ஆண்டவரே! நீரே, என்னைக் காக்கும் கேடயம், நீரே, என் மாட்சி, என்னை தலை நிமிரச் செய்ப வரும் நீரே" (தி.பா. 3.5)

இவரின் பிரிவால் துயருறும்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

*981/14 முதலாவது ஒழுங்கை,*
*வலம்புரம்,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.*

---

## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவஞ்சலி



**தம்பிப்பிள்ளை**
**மிக்கேல் யேசுதாசன்**

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 18-09-1949 | 11-10-2000 |

நித்திய இளைப்பாற்றியை கொடுத்தருளும் ஆண்டவரே! முடிவில்லாத ஒளி அவர் மேல் ஒளிர்வதாக.

*இவரின் பிரிவால் துயருறும*
மனைவி, பிள்ளைகள்

*14/4 யுவானியார் கோவில் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

---

## 25th Death Anniversary

*of*

### Mr. Edward Navaratnasingam

Twenty five years have withered away
Time goes by but memories stay
As dear and near as. Yesterday
Enfold him Dear Jesus in thy arms
and let him be a messenger of love
between our hearts and thine.

*Foridly remembered by your*

Children and grand childredn
*Keerımala Road,*
*Pandaterruppu.*

---

## விண்ணக வாழ்வில் 1ஆம் ஆண்டு

"இறந்த பின் என்றென்றும் வாழுமாறு அனைத்துலக அரசர் எங்களை உயிர்த்தெழச் செய்வார். ஏனெனில் நாங்கள் இறப்பது அவருடைய கட்டளைகளின் பொருட்டே" (2மக். 7:9)



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25 - 02 - 1925 | 15 - 11 - 1999 |

### திருமதி மேரி லூயிசா இராசரத்தினம்

*வல்லமையும் அன்பும் நிறைந்த தந்தையே!*

இவ்வுலக வாழ்வை முடித்து, தன் விசுவாசத்தின் பயன் வேண்டி நிற்கும் உம் அடியாளுக்கு உம் நித்திய இன்பத்தில் இடம்தர வேண்டுமென்று உம்மை இறைஞ்சி மன்றாடுகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 15-11-2000 புதன்கிழமை காலை 6.45 (பு.நே.) மணிக்கு சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*பிரிவால் துயருறும்,*
*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்,*
*உற்றார், உறவினர்.*

*நல்லாயன் வீதி,*
*சில்லாலை,*
*பண்டத்தரிப்பு*

---

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 - 06 - 1909 | 26 - 10 - 1993 |

### திரு.ஜோண் பிலிப்

(மலாயன் பென்சனியர்)

"சீவியத்தில் நேசித்தவரை மரணத்திலும் மறவாதிருப்போமாக!"

**இவரின் ஆத்ம சாந்திக்காக யாழ். அருள் ஆச்சிரமத்தில் 26.10.2000 6 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.**

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள

*"லூர்து வனம்"*
*ஒட்டகப்புலம்.*

---

## கண்ணீரோடு கழிந்துபோன
## காயங்களின் காலங்கள்



**திரு சந்தியா டேவிட்**

**மலர்வு 16.04.1889**
**உதிர்வு 25.10.1959**
**(41 வரு)**



**திரு. டேவிட் ஆரோக்கியநாதன்**

**06.12.1942**
**02.09.2000**
**(55வது நாள்)**



**திருமதி டேவிட் அன்னம்மா**

**02.04.1906**
**26.10.1993**
**(7 வரு)**

**"உங்களுக்கென்று ஒரு இடம் ஏற்பாடு செய்யப் போகின்றேன் செய்தபின் உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன்"**

இப் பாரினில் வாழ்ந்தது போல்
யாவுமாய் இருக்கவேண்டித்தானே
சின்னமகன் "பெரியவனை"யும்
சீக்கிரமாய் அழைத்துக்கொண்டீர்கள்
நேற்றுப்போல் தானிருக்கும்
அவரின் பிரிவுக்காக - நாம்
நித்தமும் கலங்குகின்றோம் திகைக்கின்றோம்
பொய்யாயிராதோவென ஏங்குகின்றோம்

உங்கள் ஆன்மாக்கள் ஆண்டவரில் மகிழ என்றும் பிரார்த்தனையுடன்

*குடும்பத்தினர்.*
*நவாலி தெற்கு*
*மானிப்பாய்*

---

## விண்ணக வாழ்வில் ஆண்டுகள் பதின் ஒன்று



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 - 02 - 1912 | 05 - 11 - 1988 |

### P.J. அமிர்தநாயகம்

**(இளைப்பாறிய ஆசிரியர், சம்பத்திரிசியார் கல்லூரி)**

**ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று சுவைத்துப் பாருங்கள் அவரிடம் தஞ்சம் புகுவோன் பேறுபெற்றவன் (சங். 33.8)**

இறைவா! உமது அன்பன் விண்ணகத்தில், புகுந்து பதினொரு ஆண்டுகள் நிறைவுறும் இந் நன்நாளில், அவர் மூலமாக, நீர் எமக்கு அள்ளி இறைத்த, அரும்பெரும் ஆசிகளுக்காக, நன்றி நீர் எமக்கு அள்ளி இறைத்த அரும் பெரும் ஆசிகளுக்கு நன்றி கூறி உம்மைப் போற்றி புகழ்ந்து பலிகள் ஆவலயங்களில் இந்நினைவு தினத்தில் நன்றிப் பலிகள் ஒப்புக்கொடுக்கிறோம்.

யா/ அடைக்கல அன்னை ஆலயத்திலும் அருள் ஆச்சிரமத்திலும் பண்டத்தரிப்பு தியான இல்ல சிற்றாலயத்திலும் எதிர்வரும். கார்த்திகை 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு திவ்விய பலிப்பூசைகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

குடும்ப அங்கத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்கருணை ஆண்டவரில் நம்பிக்கைகொண்டு வாழுங்கள்

## எழுவைதீவு நற்கருணைப் பேரணியில் ஆயர் அழைப்பு

"எழுவைதீவு கிராம மக்களாகிய நீங்கள் அனைவரும் நற்கருணை ஆண்டவரில் முழுமையான நம்பிக்கை கொண்டு வாழ்வதன் மூலம் கிறிஸ்துவின் சாட்சிகளாகத் திகழுங்கள். எமது நாட்டில் நிகழும் யுத்த அவலங்களிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கு நன்றியுள்ளவர்களாய் இருங்கள். இறையன்பிலும் பிறரன்பிலும் ஆண்டவன் இயேசுவின் வாழ்வை அவரது நற்கருணை பிரசன்னத்தில் கண்டு வாழுங்கள்" என ஆயர் எழுவைதீவு புனித தோமையார் ஆலயத்தில் இடம்பெற்ற நற்கருணை வார இறுதிநாள் சிறப்பு நிகழ்வுகளில் பங்குபற்றிய ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார்.

22.10.2000 அன்று மாலை கொடியேற்றத்துடன் புதிய வாழ்வின் அப்பமாகிய நற்கருணை நாதரை யூபிலி ஆண்டில் மகிமைப்படுத்தி அவரது அருள் வரங்களை நிறைவாக பெற்றிட எழுவைதீவு புனித தோமையார் ஆலயத்தில் நற்கருணை வாரம் ஆரம்பமாகியது.

நற்கருணை ஆண்டவர் பக்கம் மக்களை செல்லத் தூண்டும் வகையில் கண்காட்சி, கருத்தரங்குகள், படக்காட்சி, பொம்மலாட்டம், வில்லிசை, நாடகம் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன.

யாழ். மறைக்கல்வி நிலையத்தினரதும், திருவழிபாட்டு நிலையத்தினரதும் பூரண ஒத்துழைப்போடு அருள்தந்தையர், அருள்சகோதரர்கள், அருள் சகோதிரகள், மறையாசிரியர்கள் ஆகியோரால் ஆன்மீக வளமூட்டப்பட்டு விசுவாசம் புடமிடப்பட்டது.

நற்கருணைப் பெருவிழா நாளாகிய 29-10-2000 அன்று மாலை நற்கருணை நாதர் வீதி வழியாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துவரப்பட்டார். இம் மாபெரும் பேரணி ஆயர் தலைமையில் அருள்தந்தையர்கள் மைக்கல் சவுந்தரநாயகம், ஜெபரட்ணம், கிருபாகரன் ஆகியோரின் நற்கணைப் பகிர்வு மறையுரை வழிபாடுகள் இடம்பெற்றன.

முற்றுமுழுதாக நற்கருணை ஆண்டவர் பக்கம் எம் மனங்களை பக்தி உணர்வுடன் தூண்டிச் செல்லும் வகையில் அமைந்த இம் மாபெரும் நற்கருணைப் பேரணியில் எழுவைதீவு மக்களுடன் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை பங்கு மக்களும் இணைந்து பங்குபற்றினர். இம் மாபெரும் யூபிலி ஆண்டில் நற்கருணை ஆண்டவரில் நாம் வாழ்வு பெற பகிர்தல் ஒற்றுமை அன்புறவு விசுவாசம் தியாகம் போன்ற நற்கருணை மதிப்பீடுகளை வாழ்வாக்க இந் நற்கருணை வாரம் வழிகாட்டியது என்பதில் மிகையில்லை.

*S.G. ரூபவசந்தினி*

## வத்திக்கானிலிருந்து தீபாவளி தின செய்தி

### பரஸ்பர நட்புறவு நன்மதிப்பில் கிறிஸ்தவர்களும் இந்துக்களும்

எமது வாழ்வின் இறுதி நோக்கம் பற்றி ஆழ்ந்து சிந்திக்க தீபாவளி போன்ற விழாக்கள் ஒரு நல்ல தருணமாகும். தூய காற்றைப் போல இது உங்கள் சமய உணர்வுக்கு மீண்டும் உயிர் ஊட்டி உங்கள் மத பாரம்பரியத்தின் விதிமுறைகள் காட்டிய வழி முறையில் தொடர்ந்து செல்ல வேண்டும் என்ற நோக்கத்தைப் புதுப்பிக்கின்றது. இத்தகைய விழாக்கள் வெறும் சமய நிகழ்ச்சிகள் அல்ல. இயல்பிலேயே மத சார்புள்ளவர்களாக மனிதர் வாழ்வில் இவை அர்த்தமுள்ள வேளைகள் என்பது எமது நம்பிக்கை. மதங்களுக்கு இடையிலான உரையாடலுக்கான திருத்தந்தையின் பேரவையின் தலைவர் கருதினால் பிரான்சிஸ் அருன்சே மேற்கண்டவாறு தாம் வெளியிட்டுள்ள இவ்வாண்டிற்கான தீபாவளி தின செய்தியில் தெரிவித்துள்ளார். பரஸ்பர நட்புறவு நன்மதிப்பில் கிறிஸ்தவர்களும் இந்துக்களும் என்ற தலைப்பில் வத்திக்கான் நகரிலிருந்து வெளியிடப்பட்ட இவ்வாண்டிற்கான தீபாவளி தின செய்தியின் முழுமையை எமது அடுத்த கிறிஸ்மஸ் இதழில் வாசகர் நலன் கருதி தரவுள்ளோம்.

## காலம் தாழ்த்தாது தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு தீர்வுகாணுங்கள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் நோர்வே நாட்டு பிரதிநிதிகளுக்கும் தமிழீழ தேசிய தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்களுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாக தொடர்புசாதனங்கள் மூலமாக அறிந்து மகிழ்ச்சியடைந்தோம். புலிகள் தரப்பில் விடப்பட்டுள்ள இந்த நல்லெண்ண சமிக்ஞையை உரியவிதத்தில் பயன்படுத்தும்படி துன்பப்படும் தமிழ்மக்கள் சார்பாக வேண்டுகோள் விடுப்பதற்காக இம் மடலினை வரைகிறோம்.

நீண்டகாலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொடிய யுத்தத்தினாலும் அதன் விளைவுகளாலும் மனம் சோர்வுற்றிருக்கும் தமிழ் மக்கள் அனைவருக்கும் இந்த சந்திப்பு நிச்சயம் ஒரு நம்பிக்கையைத் தந்துள்ளது.

காலம் தாழ்த்தாது தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு முடிவுகாணும் ஒரு முயற்சியில் முழு மூச்சுடன் ஈடுபட்டு நீதியோடு கூடிய ஓர் நிரந்தரத் தீர்வினைக் காண்பதற்காக கொடுக்கப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பம் இதுவாகும்.

அண்மையில் இடம்பெற்ற தேர்தலில் தங்களுக்கு கிடைத்த வெற்றியில் கொடுக்கப்பட்டுள்ள ஆணையும் இதுவென்றே நாம் கருதுகிறோம். யாழ். மக்கள் அனைவருடைய நீண்டகால ஆசையும் ஏக்கமும் இதுவாகும்.

இதனை இத்தடவை தாங்கள் கட்டாயம் நிறைவு செய்வீர்கள் என்று நம்பிக்கையோடு எதிர் பார்த்து எல்லாம் வல்ல இறைவனைவேண்டி நிற்கின்றோம்.

## "பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பத்தை கைநழுவவிட வேண்டாம்"

1ஆம் பக்கத் தொடர்ச்சி

பேரின் கார் மேகங்கள் சூழ எறிகணை வீச்சுக்களின் வெடிச் சத்தங்கள் தொடர்ந்து யாழ். நகரை அதிரவைக்கும் சூழலில் அச்சத்தோடும் பயத்தோடும் வாழ்கின்ற யாழ். மக்களாகிய எமக்கு கடந்த புதன்கிழமை 1ஆம் திகதி உங்களுக்கும் நோர்வே நாட்டு பிரதிநிதிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு நம்பிக்கையின் ஒளிக்கீற்றாக தோன்றுகின்றது. நீண்டகாலமாக தொடர்ந்து நடைபெறும் போரின் இடம்பெயர்வுகளால் மனம் சோர்வுற்றிருக்கும் யாழ். மக்களுக்கும் பொருளாதார தடையின் இறுக்கத்தினால் துன்புற்று தளர்ந்திருக்கும் வன்னி வாழ் மக்களுக்கும் உங்களின் இந்தச் சந்திப்பு நிச்சயம் ஒரு நம்பிக்கையைத் தந்துள்ளது.

தமிழ் பேசும் மக்களின் சொல்லொணாத் துன்பங்கள் கண்டு நீங்கள் இப் போரை முடிவுக்கு கொண்டுவர பேச்சுவார்த்தைக்கு இணக்கம் தெரிவித்தது எம் எல்லோர் உள்ளத்திலும் மன மகிழ்ச்சியையும் தந்துள்ளது.

இதை முன்னெடுப்பதில் அரசின் பங்களிப்பு பெரிதாக இருந்தாலும் நீங்களும் சமாதானத்தின் பாதையை மன உறுதியுடன் பின்பற்றி அதற்கான நல் சமிக்ஞைகளை தோற்றுவித்து யுத்தத்தை முற்றுமுழுதாக முடிவுக்குக் கொண்டு வந்து நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட ஆவண செய்வீர்கள் என்று நாம் அனைவரும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்.

காலத்தை வீணடியாமல் அரசும் இவ் அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி இப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வினைக் காண நேர்மையாக உழைக்க, எம்மால் முடிந்த அனைத்து அழுத்தங்களையும் கொடுப்போம் என உறுதி கூறுகிறோம்.

நீங்கள் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைப் பெற்று நிரந்தமரமான நல்ல தொரு தீர்வினைக் காண எமது எல்லாவிதமான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் தருவோம் என உறுதி கூறுகின்றோம்.

நீண்டகால இடைவெளியின் பின் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இப் பேச்சுவார்த்தைக்கான அரிய சந்தர்ப்பத்தை கைநழுவவிடாது இறுதி வரையும் நம்பிக்கையுடன் தடைகளைக் கண்டு பின்வாங்காது செயற்படவும் முயற்சிகளில் முழுப் பயனைக் காணவும் எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கிறோம்.

## கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துமடல்கள் விற்பனைக்கு

கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துமடலும் வான் கடிதங்களும் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. பாதுகாவலன் பத்திரிகை நிருபர்கள் மூலமாகவும் மற்றைய முகவர்கள் மூலமாகவும் விற்கப்படும் மேற்படி வாழ்த்து மடல்களினால் சேகரிப்படும் பணம் 125வது ஆண்டு பாதுகாவலன் சிறப்பு மலருக்கு பயன்படுத்தப்படவிருக்கின்றது. வாழ்த்துமடல்களை பங்குகளிலும் பாடசாலைகளிலும் விற்பனைக்கு வரும்போது இம் மடல்களை வாங்கி ஆதரிக்கும்படி பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் வேண்டுகோள் விடுக்கிறார்.

## மார்கழி மாத முற்பகுதியில் திருவழிபாட்டுக் கலண்டர்கள்

யாழ். திருவழிபாட்டு நிலையத்தினரால் தயார் செய்யப்படும் திருவழிபாட்டுக் கலண்டர்கள் மார்கழி மாத முற்பகுதியில் வெளிவர உள்ளன.

ஐம்பது ரூபாவிற்கு விற்கப்படவிருக்கின்ற மேற்படி கலண்டர்களை பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் பங்குத் தந்தையர்களையோ திருவழிபாட்டு நிலையத்தையோ புனிதவளன் கத்தோலிக்க அச்சக விற்பனைப் பிரிவையோ நாடலாம்.

## ஓவியர் மார்க் காலமானார்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் இடம்பெயர்வினால் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல ஓவியர் A. மார்க் மாஸ்ரர் 26.09.2000 அன்று காலமானார். மார்க் மாஸ்ரர் மார்க் மாஸ்ரர் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் இவர் தமது 67ஆவது வயதில் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பத்திரிகையாளர் நிமலராஜனுக்கு அஞ்சலி

பாதுகாவலன் பத்திரிகை நிருபர்களின் வழமையான மாதாந்த பொதுக் கூட்டம் கார்த்திகை மாதத்தின் முதல் ஞாயிறு தினத்தன்று கூடிய போது மறைந்த பத்திரிகையாளர் நிமலராஜனுக்கு அஞ்சலி செலுத்தி அவரின் குடும்ப நலன் காக்கும் நிதிக்கு 5000 ரூபாவை அங்கத்தவர்களிடமிருந்து சேர்த்துக் கொடுப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

## நிமலராஜனுக்கு ஆயர் அஞ்சலி

பத்திரிகையாளர் நிமலராஜன் மறைந்தாலும் அவரது பணி இம் மண்ணில் தொடரும் என நம்புகிறேன் என திருப்பலியின் பின் நிமலராஜனின் உடலை ஆசீர்வதித்த ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர்க்கால சூழலில் தமிழ் மக்களின் இன்னல்களையும் மனித உரிமை மீறல்களையும் துணிவுடன் வெளியுலகிற்கு வெளிப்படுத்திய நிமலராஜனின் இறப்பு ஓர் பேரிழப்பாகும். பக்கச்சார்பின்றி நிறைவான பணி செய்த நிமலராஜன் மறைந்தாலும் உண்மை ஒருபோதும் மறையாதென ஆயர் மேலும் தெரிவித்தார்.

## பாதுகாவலன் நிருபர்களுக்கான ஒளிவிழா

பாதுகாவலன் பத்திரிகை நிருபர்களுக்கான ஒளிவிழா மார்கழி மாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. பாதுகாவலன் நிருபர்கள் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தினர் அனைவரும் மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளும்படி அழைக்கப்படுகின்றனர்.

## ஜெறோம் லம்பேட் அடிகளாரின் வெள்ளிவிழா

அமலமரித் தியாகிகள் சபையை சார்ந்த ஜெறோம் லம்பேட் அ.ம.தி. அடிகளார் தமது குருத்துவ வாழ்வின் 25 ஆண்டுகளின் நிறைவை புரட்டாதி மாதம் 8ஆம் திகதி கொண்டாடினார்.

தமது கணீர் என்ற குரலாலும் கலகலப்பான பேச்சாலும் தன்னோடு கூடியிருப்பவர்களை எப்போதும் மகிழ்ச்சியாக வைத்திருக்கும் வல்லமையைப் பெற்ற இவர் ஒரு பிரசித்தி பெற்ற பிரசங்கியராவார். நீண்டகாலமாக தமது பிரசங்கப் பணியால் யாழ் மறைமாவட்ட பங்குகள் பலவற்றை தரிசித்த இவர் நெடுந்தீவுப் பங்கில் பங்குத் தந்தையாகவும் கடமை புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடிகளாருக்கு பாதுகாவலனின் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

## இளம் குருக்களுக்கான கருத்தரங்கு

5 ஆண்டுகளுக்கு உட்பட்ட இளம் குருத்துக்களுக்கான கருத்தரங்கு யாழ். மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தினால் அண்மையில் ஒழுங்கு செய்யப்பட்டது. 12 குருக்கள் பங்குபற்றிய மேற்படி நிகழ்வினை மறைக்கல்வி நிலைய இயக்குனரும் குழுவினரும் அகவொளி குடும்ப நிலைய இயக்குனரும் குழுவினரும் அருள்திரு மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளாரும் நெறிப்படுத்தினார்கள்.

## பண்டாரவளை படுகொலை சம்பவங்களுக்கு கண்டனம்

தமிழ் மக்கள் மீது கண்மூடித்தனமாக கட்டவிழ்த்து விடப்படும் படுகொலைகள் அனைத்தையும் கண்டித்து பிரார்த்தனைக் கூட்டம் ஒன்று கார்த்திகை மாதம் 5ஆம் திகதி மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் யாழ். மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது. யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் தென்னிந்திய திருச்சபை ஆயர் ஜெபநேசன் ஆண்டகையும் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

## பங்குகளில் சமாதானகுழுக்கள்

நாம் சமாதானத்தை பேசுபவர்களாக மட்டும் இல்லாமல் அதற்காக உழைப்பவர்களாக இருக்க வேண்டும் என தெரிவித்த ஆயர் பங்குகளில் சமாதானத்துக்காக உழைக்கும் குழுக்களை உருவாக்க வேண்டும் என குருக்களுக்கான வருடாந்த ஞானவொடுக்க முடிவில் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதானவீதி 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 2000 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது P 197